بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 10

இதழ் 42

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரபீயுல் ஸானீ 23 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - அஃகா 15 ★ 15 அக்டோபர் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ یَحۡکُمُ بَیۡنَہُمۡ فِیۡ مَا ہُمۡ فِیۡہِ یَخۡتَلِفُوۡنَ ۬ؕ اِنَّ اللّٰہَ لَا یَہۡدِیۡ مَنۡ ہُوَ کٰذِبٌ کَفَّارٌ ۝

**பொருள்**

நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் கொண்டிருக்கும் கருத்து வேறுபாடு குறித்து அவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்குவான். நிச்சயமாக பொய்யருக்கும், நன்றி கொன்றவருக்கும் அல்லாஹ் நேர்வழி காட்ட மாட்டான். (39:04)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்க வேண்டும். மேலும் அவற்றை அலட்சியப்படுத்தக் கூடாது இல்லையென்றால் இது ஒரு பெரும் பாவமாக இருக்கும் நாம் நபி (ஸல்) அவர்களின் ஒவ்வொரு சொல்லிற்கும் ஒவ்வொரு எழுத்திற்கும் மகத்துவம் அளிக்கின்றோம்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்காக தொழுகைகள் ஜம்மு செய்யப்படும் என்ற முன்னறிவிப்பு

இறைவன் கடமையாக்கியவற்றின் மீது அமல் செய்யப்படுவதைப்போன்று அவன் வழங்கிய சலுகைகளின் படியும் அமல் செய்ய வேண்டும். கடமையாக்கப்பட்டவையும் அல்லாஹ்வின் புறமிருந்து இருக்கின்றன. சலுகைகளும் இறைவன் புறமிருந்தே வழங்கப்பட்டிருக்கின்றன. பாருங்கள்! நாமும் சலுகைகளின்படி அமல் செய்கின்றோம். தொழுகைகளை ஜம்மு செய்யத் தொடங்கி சுமார் இரண்டு மாதங்களுக்கும் அதிகமாகின்றது. நோயின் காரணத்தாலும், சூரா ஃபாத்திஹாவின் விளக்கவுரையை எழுதுவதற்கான பணி மும்முரத்தின் காரணத்தாலும் அவ்வாறு செய்யப்படுகின்றன. இந்த தொழுகைகளை ஜம்மு செய்வதில் تُجۡمَعُ لَہُ الصَّلٰوۃُ என்ற ஹதீஸும் முழுமையடைகின்றது. அதாவது மஸீஹிற்காக தொழுகைகள் ஜம்மு செய்யப்படும். இந்த ஹதீஸிலிருந்து இந்த விஷயமும் நிரூபணமாகியுள்ளது. அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தொழுகைக்கான நேரத்தில் இமாமாக முன்னால் நிற்க மாட்டார்; மாறாக வேறொருவர் இருப்பார்; அந்த நபர் முன்னால் நின்று மஸீஹிற்காக தொழுகைகளை ஜம்மு செய்து தொழ வைப்பார். எனவே தற்போது அதுபோன்றே நடக்கின்றது. எந்த நாளில் எம்மால் அதிகம் நோய்வாய்ப்பட்டதன் காரணத்தால் முற்றிலும் வர முடியாமல் போகின்றதோ அந்த நாளில் தொழுகைகள் ஜம்மு செய்யப்படுவதில்லை. மேலும் இந்த ஹதீஸின் சொற்களில் இருந்து இந்த விஷயம் தெரியவருகின்றது. அதாவது ஹஸ்ரத் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்பிற்கான வழிமுறைகளில் இதனை கூறியுள்ளார்கள்;

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் ......

## முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மதீனாவில் அல்லாஹ் எத்தகைய அன்ஸார் ஸஹாபிகளை வழங்கினான் என்றால் அவர்கள் தமது ஈமானிய ஆற்றலால் எப்படிப்பட்ட அழகான வெளிப்பாடுகளை வெளிப்படுத்தினர் என்றால் அதனைப் பார்த்து மனிதனின் உள்ளம் ஆனந்தத்தாலும் மகிழ்ச்சியாலும் நிறைந்து விடுகின்றது

اِنَّ فِیۡ ذٰلِکَ لَاٰیٰتٍ وَّاِنۡ کُنَّا لَمُبۡتَلِیۡنَ
(23:31)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மதீனாவில் அல்லாஹ் எத்தகைய அன்ஸார் ஸஹாபிகளை வழங்கினான் என்றால் அவர்கள் மிகவும் உறுதியுள்ள நம்பத் தகுந்த ஒன்றை பற்றிப் பிடிப்பவர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்களது ஈமானிய ஆற்றல் ஆற்றலை எவ்வாறு அழகிய முறையில் வெளிப்படுத்தினர் என்றால் அதனைப் பார்த்து மனிதனுடைய உள்ளம் ஆனந்தத்தாலும், மகிழ்ச்சியாலும் நிறைந்து விடுகின்றது. மதீனாவில் வந்த பிறகு ரஸூல் (ஸல்) அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்தது. அதாவது சிரியாவிலிருந்து நிராகரிப்பாளர்களின் ஒரு வணிக குழு அபூஸுஃப்யானின் தலைமையில் வந்து கொண்டிருக்கின்றது. மேலும் அது வழிப்பாதையில் அனைத்து அரபு கோத்திரங்களையும் முஸ்லிம்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டிக் கொண்டிருக்கின்றது என்ற தகவல் கிடைத்தது. அப்போது. அன்னார் (ஸல்) இந்த விஷயத்தை அவசியமானதாக கருதினார்கள். அதாவது நிராகரிப்பாளர்களின் இந்த தீங்குகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று முடிவு எடுத்தார்கள். எனவே அன்னார் (ஸல்) ஸஹாபிகளின் ஒரு கூட்டத்தினரை தம்முடன் அழைத்துக் கொண்டு மதீனாவில் இருந்து புறப்பட்டார்கள். அது ஒரு சிறிய குழுவாக இருந்தது. எனவே முஸ்லிம்கள் அந்த வணிகக் குழுவிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கவில்லை. (முஸ்லிம்களாகிய) அவர்கள் சிறிய எண்ணிக்கையிலான நபர்களே சென்றார்கள். அப்போது அந்த வணிகக் குழுவை

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் .....

## நபிமொழி

### மூன்று நபர்களுடன் அல்லாஹ் கியாமத் நாளன்று சண்டையிடுவான்

(2227)ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்: மூன்று நபர்களுடன் கியாமத்து நாளன்று இறைவன் சண்டையிடுவான். முதலாவது நபர், எவர் எனது பெயரில் ஓர் உடன்படிக்கை செய்துவிட்டு, பின்னர் நம்பிக்கை துரோகம் செய்துவிடுவாரோ; இரண்டாவது நபர், எவர் ஒரு சுதந்திரமானவரை விற்பனை செய்து அந்தத் தொகையை விழுங்கி விடுவாரோ; மூன்றாவது நபர், எவர் ஒரு வேலைக்காரனை வேலையில் அமர்த்தி, அவரிடமிருந்து முழுமையான பணியை வாங்கிக் கொண்டு, அவருக்குரிய கூலியை கொடுக்காதவர் ஆவார்.

(2259) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு இரண்டு அண்டை வீட்டார் இருக்கின்றனர். அவர்கள் இருவரில் நான் யாருக்கு அன்பளிப்பு கொடுப்பது? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு, அவர்களில் எவருடைய வீட்டு வாசல் உமக்கு மிக அருகில் இருக்கின்றதோ அவருக்கு! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

(2261) பதவிக்கு ஆசைப்படக் கூடாது

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஏமனிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் நான் ஆஜரானேன்.

மேலும், என்னுடன் அஷ்அர் கோத்திரத்தைச் சார்ந்த இரு நபர்கள் இருந்தனர். (அவர்கள் இருவரும் பதவி ஆசை

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் ......

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு நடைபெற்ற சில போர்கள் மற்றும் ஸரிய்யாக்களின் பின்னணியில்**
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஒரு போர்த் திட்டத்திற்கு படையை அனுப்பி வைத்தவாறு இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள்: ஸலாத்தை அதிகம் பரப்புங்கள்; அதாவது அமைதியை ஊக்குவியுங்கள் என்பதாகும். மக்களுக்கு உணவளியுங்கள்; அவர்களை பட்டினிப் போட்டு கொல்லக்கூடாது; மேலும் ஒரு கண்ணியமிக்க நபர் தனது குடும்பத்தினரிடம் எவ்வாறு வெட்கப்படுகின்றாரோ அதேபோன்று அல்லாஹ்விடம் வெட்கப்படுதல் வேண்டும்; ஏதாவது தவறு அல்லது பாவம் செய்துவிட்டால் உடனடியாக அதற்குப் பிறகு நன்மை செய்து விடுங்கள்; ஏனென்றால் நன்மைகள் பாவங்களை அழித்து விடுகின்றன

நன்றாக நினைவில் கொள்ளுங்கள்! எந்தவொரு மனிதர் மரணிப்பதற்கு தயாராகி விடுகிறாரோ அவரை எவராலும் கொல்ல முடியாது. உண்மையில் மரணத்தை ஏற்றுக் கொள்ள கூடியவர்கள் நபிமார்களின் கூட்டமே ஆகும். பிறகு அவர்களை கொல்பவர் எவரும் இருக்க முடியுமா?; ஒருபோதும் கிடையாது; நிரந்தர வாழ்வை பெறுவதன் அடிப்படை என்னவென்றால் மனிதன் இறைவனுக்காக மரணத்தை ஏற்றுக் கொள்வது என்பதே ஆகும். மேலும் ஒரு மனிதன் இந்த எண்ணத்துடன் எழுந்து நிற்கின்றான் என்றால் இறைவனது வானவர்கள் அவனை உயிர்ப்பிப்பதற்காக எழுந்து நிற்கின்றார்கள். இவ்வாறாக யுத்தம் ஆரம்பித்து விடுகிறது. மனிதன் இறை வழியில் மரணம் கிடைக்க வேண்டும் என்று கடினமாக முயற்சிக்கின்றான். ஆனால் வானவர்கள் அவனை உயிரோடு வைக்க முயற்சிக்கின்றார்கள் (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள்)

கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஸய்யிது ஷஹாப் ஸாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய முபாரக் கோக்கர் ஸாஹிப் ஆகியோரின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 செப்டம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தபூக் மாதம் 12 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹுனைன் போர் தொடர்பாக நான் குறிப்பிட்டிருந்தேன் அதன் மேற்கொண்ட விவரம் இவ்வாறாகும். ஹுனைன் போரிலும் அல்லாஹ்விடமிருந்து எப்படிப்பட்டதொரு படை இறக்கப்பட்டதாக குறிப்பு கிடைக்கின்றது என்றால் அவர்களை வானவர்கள் என்று கூறப்படுகிறது. ஹுனைன் போர் தொடர்பாக திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்;

أَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
ثُمَّ اَنْزَلَ اللّٰهُ سَكِيْنَتَهٗ عَلٰى رَسُوْلِهٖ وَعَلَى الْمُؤْمِنِيْنَ
وَاَنْزَلَ جُنُوْدًا لَّمْ تَرَوْهَا وَعَذَّبَ الَّذِيْنَ
كَفَرُوْا وَذٰلِكَ جَزَآءُ الْكٰفِرِيْنَ

பொருள்: பின்னர் அல்லாஹ் தனது தூதருக்கும், நம்பிக்கை கொண்டவர்களுக்கும் தனது அமைதியினை இறக்கினான். மேலும் நீங்கள் காணாத படைகளையும் இறக்கி நிராகரிப்பாளர்களுக்குத் தண்டனையளிக்கின்றான். இதுவே நிராகரிப்பவர்களுக்குரிய கூலியாகும். (அத்தவ்பா :26)

விரிவுரையாளர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் இந்த போரில் வானவர்கள் இறங்கியது தொடர்பான பல்வேறு விவாதங்களை செய்கின்றார்கள். வானவர்கள் இறங்குவது என்பது நம்பிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தியாகவும், மேலும் அவர்களின் மன ஆறுதலுக்காகவுமே இருந்தது; ஏனெனில், வானவர்கள் போரில் செயல் ரீதியாக கலந்து கொண்டிருக்கவில்லை என்பது சிலரின் எண்ணமாகும். இந்த சிந்தனைகளும் சில ஸஹீஹான ஹதீஸ்களுக்கு முரணாகவே உள்ளன. ஸஹீஹான அறிவிப்புகளில் இருந்து வானவர்கள் செயல் ரீதியாக போரில் பங்கு பெற்றார்கள் என்று நிரூபணம் ஆகியுள்ளது.

எவ்வாறிருப்பினும் இங்கு ஒரு சந்தேகம் உருவாகிறது. அதாவது வெற்றி பெறுவதற்காக ஒரு வானவரே போதுமானவராவார் எனும் போது ஆயிரக்கணக்கான வானவர்கள் ஏன் இறங்கினார்கள்? என்ற ஐயம் எழுகிறது. போரின்போது வானவர்கள் இறங்கியது பற்றிய ஹதீஸ்களை இமாம் இப்னு கஸீர் ஸஹீஹைனில் பதிவு செய்த பிறகு எழுதுகின்றார்கள் ;

அல்லாஹ்வின் புறமிருந்து வானவர்கள் இறங்குதல் மற்றும் அது பற்றி முஸ்லிம்களுக்கு கிடைத்த தகவல் போன்றவை நற்செய்தியைப் போன்றே இருந்தன. ஏனென்றால் அல்லாஹ் இவை இல்லாமலும் எதிரிகளுக்கு எதிராக முஸ்லிம்களுக்கு உதவி செய்திருக்க முடியும். எனவேதான் வெற்றி அல்லாஹ்விடம் இருந்து மட்டுமே ஆகும் என்று அவன் கூறியுள்ளான். மேலும் சூரா முஹம்மதில் இவ்வாறு கூறியுள்ளான்; அல்லாஹ் நாடினால் சுயமே அந்த காஃபிர்களை பழிதீர்த்திருப்பான். ஆனால் அவன் சோதிக்கின்றான்.

( அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், ஜூலை 24- 29, 2023, குத்பா பேருரை, ஜூலை 07, 2023)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த விஷயத்தை கூறியுள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகிறார்கள் ;

திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களின் உள்ளம் குளிர, மேலும் போர்களில் அவர்கள் அஞ்சாமல் இருக்க வானவர்களின் உதவி பற்றிய நற்செய்தி இடம் பெற்றுள்ளது. இவ்வாறாக அல்லாஹ் திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவன் ஐயாயிரம் வானவர்களுடன் அவர்களுக்கு உதவி புரிய வருவான் என்ற நற்செய்தியை வழங்கியுள்ளான். இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி காண்பித்ததன் காரணம் அவர்களுக்கு அது நற்செய்தியாக இருக்கட்டும்! என்பதற்காக! ஏனென்றால் வானவர்களில் ஒரு வானவரே தனது ரப்பின் கட்டளையால் பூமியை தலைகீழாக புரட்டி விட முடியும். எனவே ஐயாயிரம் அல்ல; மாறாக ஐந்துக்கும் கூட அவசியமில்லை. ஆனால் அல்லாஹ் அவர்களுக்கு மாபெரும் வெற்றியை காண்பிப்பதற்காக அந்த வார்த்தையை பயன்படுத்தினான். இதிலிருந்து உதவிகள் செய்தவர்களின் பெரும்பான்மை வெளிப்படுகின்றது. மேலும் இதுவே இதற்கு பொருளாக எடுக்கப்பட்டது.

(அத்தப்லீஃக் எனும் நூலின் உருது மொழியாக்கம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 5, பக்கம் 448)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் தஃப்ஸீரே ஸகீரில் இது தொடர்பாக சுருக்கமான குறிப்பை வழங்கியுள்ளார்கள். சூரா ஆலி இம்ரானின் 127 வது வசனத்தின் அடிக்குறிப்பில் எழுதியுள்ளார்கள்:

வானவர்கள் பற்றிய குறிப்பு எதனால் என்றால் கனவு அல்லது ஆன்மிகக் காட்சியில் இந்த நற்செய்தி கிடைப்பதனால் மனிதனது தைரியம் அதிகரிக்கின்றது. உண்மையான பொருள் அல்லாஹ் உதவி புரிவான் என்பதே ஆகும். அதாவது இதுவும் ஆன்மிகக் காட்சியாக வெளிப்பட்டது.

பிறகு அன்னார் (ரலி) ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

நன்றாக நினைவில் கொள்ளுங்கள்! எந்தவொரு மனிதர் மரணிப்பதற்கு தயாராகி விடுகிறாரோ அவரை எவராலும் கொல்ல முடியாது. உண்மையில் மரணத்தை ஏற்றுக் கொள்ள கூடியவர்கள் நபிமார்களின் கூட்டமே ஆகும். பிறகு அவர்களை கொல்பவர் எவரும் இருக்க முடியுமா?; ஒருபோதும் கிடையாது; நிரந்தர வாழ்வை பெறுவதன் அடிப்படை என்னவென்றால் மனிதன் இறைவனுக்காக மரணத்தை ஏற்றுக் கொள்வது என்பதே ஆகும். மேலும் ஒரு மனிதன் இந்த எண்ணத்துடன் எழுந்து நிற்கின்றான் என்றால் இறைவனது வானவர்கள் அவனை உயிர்ப்பிப்பதற்காக எழுந்து நிற்கின்றார்கள். இவ்வாறாக யுத்தம் ஆரம்பித்து விடுகிறது. மனிதன் இறை வழியில் மரணம் கிடைக்க வேண்டும் என்று கடினமாக முயற்சிக்கின்றான். ஆனால் வானவர்கள் அவனை உயிரோடு வைக்க முயற்சிக்கின்றார்கள். நான் இறைவனுக்காக மரணத்தை நாடுகிறேன் என்று ஓர் இறையடியார் கூறும் போது இறைவனது அனைத்து வானவர்களும் நாங்கள் மரணிக்க விடமாட்டோம் என்று கூறுகிறார்கள். மேலும் இறுதியில் வானவர்களே வெல்கிறார்கள். அடியான் மரணிக்க வேண்டும் என்று நாடுகின்றான். மேலும் அதற்காக தன்னைத்தானே எப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆழ்த்திக் கொள்கிறான் என்றால் அதன் விளைவு மரணமாக இருக்கின்றது. ஆனால் அவன் மரணிப்பதில்லை. ஹுனைனின் சம்பவத்தையே பாருங்கள்! எதிரிகள் தாக்குதல் நடத்தி முன்னேறிய போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கருகில் 12 நபர்களே இருந்தார்கள். மற்ற அனைவரும் எதிரிகளின் அம்புகளால் சிதறி போய் விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், தலைவரே! பின்வாங்கி விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் குதிரையை உதைத்தவாறு முன்னேறினார்கள். மேலும்

أَنَا النَّبِيُّ لَا كَذِبْ أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

என்று கூறினார்கள். நான் இறைவனின் உண்மையான தூதுர் ஆவேன்; நான் எப்படி புறமுதுகு காட்ட முடியும்?.

இது எப்படிப்பட்ட ஒரு வார்த்தை என்றால் இது மனிதத் தன்மையை மறந்து விட்டு இறைவனின் முன் கொண்டு சென்று நிறுத்தக் கூடியதாகும். நான்காயிரம் வில்லாளிகளுக்கு எதிரில், இங்கிருந்து என்னால் பின்வாங்க முடியாது என்று ஒரு நபர் கூறுகிறார் எனும் போது இது மனிதனல்ல மாறாக இறைவன் கூறுவதாகும். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களும் அச்சமயம் أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ என்று கூறினார்கள். பொருள்: நான் மனிதனே ஆவேன்,

ஆக, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் நான் இறைவழியில் மரணத்தை நாடுகிறேன் என்று கூறிய போது இறைவனது வானவர்கள் இறங்கி ஹுனைன் போரின் தோல்வியை வெற்றியாக மாற்றினார்கள். மேலும் அன்னார் (ஸல்) வெற்றி வாகை சூடி போர்க்களத்தில் இருந்து திரும்பினார்கள். (குத்பாத்தே ஷுவ்ரா,தொகுதி 1, பக்கம் 612 - 613, மஜ்லிஸே முஷாவிரத், 1935)

எதிரிகளின் தோல்வி மற்றும் அவர்கள் வெருண்டோடியது பற்றி நான் இந்த விவரங்களை கூறியிருந்தேன். அதாவது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அன்ஸார் ஸஹாபிகளை அழைத்த போது அவர்கள் திரும்பி வந்தார்கள். மேலும் பிறகு நன்கு வீரத்துடன் போர் புரிய ஆரம்பித்தார்கள். அத்துடன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். மேலும் தமது கைகளால் மண்ணை நிராகரிப்பாளர்களை நோக்கி வீசினார்கள். இதன் விளைவாக, "முஹம்மது (ஸல்) அவர்கள் இன்று வரை நன்கு போரிடக்கூடிய சமுதாயத்தை சந்திக்கவில்லை; எங்களுடன் போரிட்டால் போர் என்றால் என்னவென்பதை நாங்கள் கூறுவோம்" என்று வாதம் செய்த மேலும் உண்மையில் அரேபியாவின் வலிமை பொருந்திய சமுதாயங்களில் ஒன்றாக இருந்த . மேலும் பேச்சுகளில் மட்டுமல்லாமல்; உண்மையிலேயே வலுவான சமுதாயமாக இருந்த பனூ ஹவாஸின் சிறிது நேரத்திலேயே தோல்வியை தழுவி ஓட ஆரம்பித்தார்கள். தனது மனைவி, குழந்தைகள் மற்றும் செல்வங்கள் கால்நடைகளைப் பற்றிய எந்தவொரு அக்கறையும் அவர்களுக்கு இருக்கவில்லை. முஸ்லிம்களது கைகளால் பல மக்கள் கொல்லப்பட்டார்கள். மேலும் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டார்கள். மேலும் ஓடியவர்களில் பெரும்பான்மையோர் அவ்தாஸை நோக்கி ஓடி விட்டார்கள். (ஷரஹ் ஸர்கானீ, தொகுதி 3. பக்கம் 530 - 531,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1996-ம் ஆண்டு பதிப்பு)

இந்தப் போரில் ஹவாஸின் கோத்திரத்தின் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் இருபது இணை வைப்பாளர்களைக் கொன்றார்கள். அதே போன்று அவ்தாஸ் போரில் 350 இணை வைப்பாளர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஹவாஸின் கோத்திரத்தார் வெருண்டோடிய பிறகும் ஸகீஃப் கோத்திரத்தின் போராளிகள் நின்று போரிட்டார்கள். மேலும் மிகவும் வீரத்துடன் போரிட்டார்கள்; எதுவரை என்றால் அவர்களில் 70 நபர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களில் இறுதியாக கொடியை தாங்கிப் பிடித்திருந்தவன் உஸ்மான் பின் அப்தில்லாஹ் ஆவான். அவன் கொல்லப்பட்டதும் ஸகீஃப் கோத்திரத்தாரும் ஓடி விட்டார்கள். உஸ்மான் கொல்லப்பட்ட தகவல் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை அடைந்ததும், அன்னார் (ஸல்) அந்த இஸ்லாத்தின் எதிரியைக் குறித்து கேட்டார்கள். அல்லாஹ் அவனை தனது கருணையில் இருந்து விலக்கி வைப்பானாக! ; இவன் குறைஷியர்களுடன் வெறுப்புணர்வு கொண்டிருந்தான். மேலும் அவனைக் கொன்ற ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ உமையா (ரலி) அவர்களுக்காக கருணையை வேண்டி துஆ செய்தார்கள். "இறைவன் எனக்கு இதே நிலையில் ஷஹாதத்தை வழங்கி விடுவான் என்று நான் நம்புகிறேன்" என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

சில அறிவிப்புகளின் அடிப்படையில் இறுதியாக கொடியை தாங்கிப் பிடித்த உஸ்மான் பின் அப்தில்லாஹ்வை ஹஸ்ரத் அலீ(ரலி) அவர்கள் கொன்றார்கள் என்றுள்ளது. ஆனால் முந்தைய விளக்கம் தவறானதாகும். இந்தப் போரில் நான்கு நபித்தோழர்கள் ஷஹீதானார்கள். அவர்களது பெயர்கள்; ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) அவர்களின் மகனான அய்மன் பின் உபைத் ஆவார்கள். இந்த உம்மே அய்மன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை வளர்ப்புத் தாய் ஆவார்கள். அதாவது கண்காணிப்பாளர் மற்றும் வளர்ப்பவராக இருந்தார்கள். ஸுராகா பின் ஹாரிஸ் - இவர் அன்ஸாரி ஸஹாபி ஆவார்கள். இவர்களது மகன் ஹாரிஸா பின் ஸுராக்கா பத்ரு போரில் ஷஹீதானார்கள். யஸீத் பின் ஸம்ஆ ஆரம்பத்தில் இஸ்லாத்தை தழுவியவர் ஆவார்கள். மேலும் அறிவீனத்தின் காலத்திலும் குரைஷர்களிடத்தில் உயர்ந்த மதிப்பு மற்றும் அந்தஸ்தை பெற்ற மனிதராக இருந்தார்கள். குறைஷியர்கள் முக்கிய விவகாரங்களில் இவர்களிடம் ஆலோசனை பெற்று வந்தார்கள். இவர்கள் நம்பிக்கையாளர்களின் தாயாரான உம்மே ஸலமா (ரலி) அவர்களின் சகோதரியின் மகன் ஆவார்கள். போர்க்களத்தில் இவர்களது குதிரை துள்ளியதால் இவர்கள் ஷஹீதானார்கள். கீழே விழுந்து குதிரையின் காலடியில் வந்து விட்டார்கள். சிலரைப் பொருத்தவரை இவர்கள் தாயிஃப் போரில் ஷஹீதானார்கள். இது பற்றியும் எடுத்துரைக்கப்படும். நான்காவது ஹஸ்ரத் அபூ ஆமீர் (ரலி) ஆவார்கள். இவர்கள் பற்றிய விபரமும் அவ்தாஸ் போரின் குறிப்பில் எடுத்துரைக்கப்படும்.

ஹஸ்ரத் ஆயிஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்; ஹுனைன் போரில் எனது நெற்றியில் ஓர் அம்பு பட்டது. என்னுடைய முகத்திலும், நெஞ்சிலும் ரத்தம் வழிந்து படரத் தொடங்கியது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய கையை எனது முகம் மற்றும் நெஞ்சில் இருந்து வயிறு வரை தடவினார்கள். மேலும் அவர்கள் ரத்தத்தை சுத்தம் செய்தார்கள். இதனால் ரத்தம் அந்த நேரத்திலேயே நின்று விட்டது. அதற்குப் பிறகு அன்னார் (ஸல்) எனக்காக துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அவர் மீது கரத்தால் தடவினார்கள். அதனால் அன்னாரது அருளுக்குரிய கரத்தின் அச்சு அவரது உடலில் பின்னரும் இருந்தது.

ஒரு குதிரைப் படையின் தலைவராக இருந்த ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் துவக்க கட்டத்திலேயே மிகவும் மோசமாக காயமடைந்திருந்தார்கள். முன்னரே கூறப்பட்டுவிட்டது. படை இங்கும்

அங்கும் சிதறிப் போனதும் அன்னார் (ரலி) விழுந்துவிட்டார்கள்.

ஓர் அறிவிப்பாளர் கூறுகிறார்; நிராகரிப்பாளர்கள் தோல்வி அடைந்ததும் முஸ்லிம்கள் தத்தமது கூடாரத்திற்கு சென்று விட்டார்கள். நான் ஹஸ்ரத் ரசூல் (ஸல்) அவர்கள் மக்களுக்கிடையே சென்று கொண்டிருந்ததைக் கண்டேன். மேலும் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் என்னை கொண்டு சேர்ப்பது யார்? என்று கேட்டார்கள். அவர்கள் அருகில் சென்றபோது காலித் (ரலி) அவர்கள் சேணையின் மீது சாய்ந்தவாறு அமர்ந்திருந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் காலிதுக்கு அருகில் அமர்ந்து விட்டார்கள். மேலும் காயத்தைக் கண்டு, அதில் தமது உமிழ் நீரை தடவினார்கள். அதனால் அவரது காயம் ஆறிவிட்டது. அது தவிர ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா (ரலி) , ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) ஆகியோரும் காயமடைந்தார்கள்.

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 9, பக்கம் 279) (ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 162, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 2002-ம் ஆண்டு பதிப்பு)

மக்காவாசிகள் மற்றும் மதீனாவாசிகளுக்கு ஹுனைன் போரின் வெற்றியின் நற்செய்தி அனுப்பப்பட்டது. ஆரம்பத்தில் ஹுனைன் களத்தில் இருந்து ஓடிவிட்டார்கள். அவர்களில் சிலர் மக்கா சென்றார்கள். மேலும் அங்கு முஸ்லிம்கள் தோல்வி அடைந்து விட்டார்கள்; மேலும் முஹம்மது (ஸல்) நவூது பில்லாஹ்! கொல்லப்பட்டு விட்டார்கள் என்று கூறி விட்டார்கள். இந்த செய்தியால் மக்காவில் இருந்த நயவஞ்சகர்கள் மற்றும் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்த மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும் இப்போது அரேபியா மீண்டும் தன்னுடைய சொந்த மார்க்கத்தின் பால் திரும்பி விடும் என்று கூறினார்கள். அச்சமயத்தில் மக்காவின் அமீரான இத்தாப் பின் அஸீத் மிகவும் தைரியத்துடனும், வீரத்துடனும் நடந்து கொண்டார்கள். மேலும் மக்காவாசிகளிடம் உரையாற்றியவாறு

إِنْ قُتِلَ مُحَمَّدٌ فَإِنَّ دِيْنَ اللهِ قَائِمٌ، وَالَّذِىْ يَعْبُدُهٗ
مُحَمَّدٌ حَىٌّ لَا يَمُوْتُ

என்று கூறினார்கள். பொருள்: ஒருவேளை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) ஷஹீதாகி இருந்தாலும் கூட பின்னர் நிச்சயமாக அல்லாஹ்வின் மார்க்கம் எப்போதும் நிலைத்திருக்கும். மேலும் எந்த இறைவனை முஹம்மத் (ஸல்) வணங்கி வந்தார்களோ (அதாவது அல்லாஹ்வாகிய) அவன் எப்போதும் நிலைத்திருப்பான்; அவன் உயிருள்ளவன் ஆவான்; மேலும் (என்றென்றும்) உயிரோடு இருப்பவன் ஆவான்; அவன் ஒருபோதும் மரணிக்க மாட்டான்.

அப்போது சிறிது நேரம் தான் கடந்திருக்கும். அதற்குள், ஹுனைனில் இருந்து முஸ்லிம்கள் வெற்றி பெற்று விட்டார்கள்; மேலும் ஹவாஸின் கோத்திரத்தார் மிக மோசமான தோல்வியடைந்து ஓடிவிட்டார்கள் என்ற நற்செய்தியும் வந்து விட்டது. இதே போன்று மதீனாவிலும் இந்த தகவல் சென்றடைந்து விட்டிருந்தது. தோல்வியின் செய்தி முதலில் சென்றடைந்திருந்தது. யாரோ எட்ட வைத்திருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் நஹீக் பின் அவ்ஸ் (ரலி) அவர்களை வெற்றியின் நற்செய்தியை வழங்கி அனுப்பினார்கள். அவர்கள் கூறுகிறார்கள்; நான் மாலைநேரத்திலேயே புறப்பட்டுவிட்டேன். அப்போது வழிப்பாதையில் மக்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தனர். அதாவது முஹம்மது (ஸல்)அவர்களது படைக்கு எப்படிப்பட்ட தோல்வியை தழுவ நேர்ந்து விட்டது என்றால் முன்னர் ஒருபோதும் இப்படிப்பட்ட தோல்வி ஏற்பட்டிருந்திருக்காது; மேலும் மாலிக் பின் அவ்ஃபின் படை முஹம்மது (ஸல்) அவர்களுடைய படை மீது மேலோங்கி விட்டது என்று மக்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

எனவே ‘‘இவை அனைத்தும் பொய்யாகும்; இன்னும் கூறப்போனால், அல்லாஹுத்ஆலா தனது நபிக்கு வெற்றியை வழங்கினான்; மேலும் (எதிரிகளாகிய) அவர்களின் பெண்கள் மற்றும் குழந்தைகளை கைதியாக வழங்கியுள்ளான்” என்று நான் கூறினேன்.

கூறுகிறார்கள்; நான் இந்த செய்தியை கூறியவாறு மூன்று நாட்களுக்குள் மதீனா சென்றடைந்தேன். மேலும் இதற்கு முன்பு நான் இந்த அளவுக்கு பயணம் செய்திருக்கவில்லை. அதாவது தொடர்ந்து வேகமாக பயணம் செய்தேன். பிறகு மதீனா சென்றடைந்து முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமாக இருக்கிறார்கள்; மேலும் முஸ்லிம்களுக்கு பெரும் வெற்றி கிடைத்து விட்டது என்று அறிவித்தேன். மேலும் நான் அங்கிருந்து செல்லும்போது முஸ்லிம்களில் சிலர் போர்ச் செல்வத்தையும் திரட்டி விட்டிருந்தார்கள். மேலும் சிலர் திரட்டிக் கொண்டிருந்தார்கள். மேலும் பிறகு அவர், தூய மனைவிமார்களின் அறைகளை நோக்கிச் சென்றார்கள்

மேலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது உடல்நலத்தைப் பற்றிய நற்செய்தியை அவர்களுக்கு வழங்கினார்கள். மேலும் இதனைக் கேட்டு அனைவரும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள் .மேலும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

( ஸுபுலுல் ஹுதா தொகுதி 5, பக்கம் 320-340, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்,1993)

பனூ ஹவாஸின் கோத்திரத்தின் தளபதியான மாலிக் பின் அவ்ஃப் மிகவும் கஷ்டப்பட்டு போர்க்களத்தை விட்டு ஓடி தப்பிவிட்டான். மேலும் அவனுடன் இருந்தவர்கள் ஒரு பகுதியில் நின்று கொண்டிருந்தார்கள். நில்லுங்கள்! உங்களது பலவீனமான சகோதரர்களும் வந்து சேரட்டும்! என்று அவன் கூறினான். ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் (ரலி), அவர்களைக் கண்டார்கள்; மேலும் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். மேலும் மாலிக் அங்கிருந்து ஓடி ஸகீஃபின் கோட்டைக்குள் நுழைந்து விட்டான். (ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 771 தாருல் குதுபில் இல்மியா, 2001-ம் ஆண்டு பதிப்பு)

முஹல்லிம் பின் ஜஸ்ஸாமஃ ஒரு மனிதரை கொன்றது மற்றும் அவருக்கு இழப்பீடு வழங்கிய சம்பவத்தின் கூடுதல் விபரங்கள் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மக்கா வெற்றி தொடர்பான குறிப்பு எடுத்துரைக்கப்படுவதற்கு சற்று முந்தைய குத்பாவில் இஸம் ஸரிய்யாவின் விளக்கத்தில் இந்தக் குறிப்பு கூறப்பட்டுள்ளது; அதாவது “முஹல்லிம் பின் ஜஸ்ஸாமா” என்ற ஒரு ஸஹாபி வழியில் கடந்து செல்லும்போது ‘‘அஸ்ஸலாமு அலைக்கும்” என்று ஒரு நபர் கூறியிருந்தார்; அவ்வாறிருந்தும் கூட அன்னார் அந்த நபரைக் கொலை செய்திருந்தார்கள்.

இந்த சம்பவம் தொடர்பாக மேற்கொண்டு விவரங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. அது என்னவென்றால் ஹுனைன் போருக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தாயிஃப் போருக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, ஒருநாள் லுஹர் தொழுகைக்குப் பிறகு அன்னார் (ஸல்) ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்கள்; அப்போது உயைனா பின் ஹிஸ்ன் என்பவர் எழுந்து கொல்லப்பட்ட ஆமீர் பின் அஸ்பத் அஷ்ஜயீ யின் இழப்பீட்டுத் தொகையை வேண்டினார். அவருடனேயே அக்ரஃ பின் ஹாபிஸ் எழுந்தார். அவர் முஹல்லிம் பின் ஜஸ்ஸாமாவை காப்பாற்ற விரும்பியிருந்தார். அவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் விவாதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

உயைனா கூறினார்; அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவனை அதாவது கொலையாளியை விடமாட்டேன்; எவ்வாறு அவன் எங்களது பெண்களை பெரும் துன்பங்களில் ஆழ்த்தினானோ அதே போன்று அவர்களின் பெண்களையும் நான் பெரும் துன்பங்களில் ஆழ்த்தி விடுவேன் என்று கூறினார். அதற்கு, இழப்பீடு பெற்றுக் கொள்ளுங்கள்; 50 ஒட்டகங்களை தற்போது பெற்று கொள்ளுங்கள்; மேலும் 50 ஒட்டகங்களை மதீனா சென்று பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால் உயைனா இழப்பீடை பெற மறுத்துவிட்டார்.

எவ்வாறாயினும் சிறிது பேச்சுவார்த்தைக்குப் பிறகு அவர்கள் இழப்பீட்டைப் பெற ஒப்பு கொண்டு விட்டனர். கொலை செய்த முஹல்லிம் ஒருபுறம் நின்று கொண்டிருந்தார்; மேலும் தற்போது தனக்கு மரணம் வந்துவிட்டது என்று அவர் பழிதீர்ப்புக்கு ஆயத்தமாகி வந்தார். இழப்பீடு பற்றி தீர்மானிக்கப்பட்டதும் முஹல்லிம் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கருகில் அமர்ந்துவிட்டார். அவருடைய கண்களில் கண்ணீர் வடிந்தது. அவர் கூறினார்:

நீங்கள் கேள்விப்பட்ட விஷயத்திற்காக நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்கிறேன்; தாங்களும் எனது பாவமன்னிப்பிற்காக துஆ செய்யுங்கள்.

அதற்கு, உமது பெயர் என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். “முஹல்லிம் பின் ஜஸ்ஸாமா” என்று அவர் கூறினார். அன்னார் (ஸல்) நீர் இஸ்லாத்தை தழுவிய உடனேயே அவரை கொன்று விட்டீரா? அதாவது அவர் வந்ததுமே அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறியிருந்தார்; அப்படியிருந்தும் நீர் அவரை கொன்று விட்டீர் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் உரத்த குரலில் அல்லாஹ்வே! முஹல்லிமை மன்னிக்காதே! என்று கூறினார்கள். இந்த சொற்றொடரை அனைவரும் கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் மன்னிப்பு வேண்டுகிறேன்; நீங்களும் எனக்காக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று முஹல்லிம் மீண்டும் கூறினார். அன்னார் (ஸல்) மீண்டும் மக்கள் கேட்க வேண்டும் என்பதற்காக உரத்த குரலில் அல்லாஹ்வே! முஹ்லிமை மன்னிக்காதே! என்று கூறினார்கள். அவர் மூன்றாவது முறையாக மீண்டும் கூறினார். மேலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மூன்றாவது முறையும் அவ்வாறே கூறினார்கள். பிறகு, என் முன் இருந்து எழுந்து சென்று விடுங்கள்! என்று அவரிடம் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே அவர் அன்னார் (ஸல்) முன்னால் இருந்து எழுந்தார்; மேலும் தனது போர்வையால் தனது கண்ணீரை துடைத்துக் கொண்டிருந்தார். இப்னு இஸ்ஹாக்கின் ஓர் அறிவிப்பும் இருக்கின்றது. அவர்கள் கூறுகின்றார்கள்; அதாவது பிற்காலத்தில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அவரது மன்னிப்பிற்காகவும் துஆ செய்தார்கள் என்று முஹல்லிமுடைய சமுதாயத்து மக்கள் கூறுகின்றனர்.

(ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத் ஃபீய் ஸீரதே கைருல் இபாத், தொகுதி 5, பக்கம் 339-340, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1993)

அவ்தாஸ் போரின் விவரம் இவ்வாறாகும்; ஹுனைன் போர்க்களத்தில் மோசமாக தோல்வியடைந்த பிறகு பனூ ஹவாஸினின் முகம் எங்கு திரும்பியதோ அங்கு ஓடிவிட்டார்கள். பனூ ஹவாஸினின் தளபதியான மாலிக் பின் அவ்ஃப் இருந்த ஒரு பிரிவினர் தாயிஃபை நோக்கி ஓடிவிட்டார்கள். மேலும் தாயிஃப் கோட்டையில் அடைக்கலம் பெற்றார்கள். மேலும் மற்றுமொரு பிரிவினர் அவ்தாஸின் பள்ளத்தாக்கில் ஒன்று கூடினர். மேலும் ஒரு பிரிவினர் நஃக்லஃ அதாவது நுஃகைலஃவை நோக்கி ஓடிவிட்டனர். அவ்தாஸ் என்பது ஹுனைனுக்கு அருகில் இருந்த ஒரு பள்ளத்தாக்கின் பெயராகும். பனூ ஹவாஸின் தனது மனைவி,மக்கள், அனைத்து செல்வங்கள் மற்றும் கால்நடைகளுடன் போர் புரிந்தார்கள். அவர்கள் ஓடி விட்டார்கள். மேலும் அவர்கள் விட்டுச் சென்ற மற்ற அனைத்தும் போர் செல்வங்களாக முஸ்லிம்களுடைய கைகளில் வந்து விட்டன. இஸ்லாமிய வரலாற்றில் அப்போது வரைக்கும் அவர்களுக்கு கிடைத்தவற்றில் அதிகமான போர் செல்வங்களாக அவை இருந்தன. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அனைத்து கைதிகள் மற்றும் போர் செல்வங்களை ஹஸ்ரத் மஸ்ஊத் பின் அம்ர் ஃகிஃபாரி அவர்களின் கண்காணிப்பில் ஜிஃரானஃ என்ற இடத்தின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். மேலும் சுயமே படை முழுவதையும் அழைத்துக் கொண்டு தாயிஃபை நோக்கி புறப்பட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூ ஆமிர் அஷ்அரி - இவர்களது பெயர் உபைத் பின் ஸுலைம் என்பதாக இருந்தது. அன்னாரது தலைமையில் ஒரு படையை அவ்தாஸை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அந்த போர்ப் படையில் அபூ மூஸா அஷ்அரி மற்றும் ஸலமஃ பின் அக்வஃ ஆகியோரும் இருந்தனர். ஹஸ்ரத் அபூ ஆமிர் (ரலி) அவர்கள் எதிரிகளுக்கு சண்டையிட அழைப்பு விடுத்தார்கள். அங்கு எதிரிகளின் 10 சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் ஈடற்ற போர் திறமைகளை கொண்டிருந்த காரணத்தினால் பிரசித்தி பெற்றவர்களாக இருந்தார்கள். எல்லாரையும் விட முதலில் இந்த பத்து சகோதரர்களும் சண்டையிட புறப்பட்டார்கள். முதலில் ஒரு சகோதரன் வந்தான். அவனிடம் அபூ ஆமீர் முதலில் இஸ்லாத்தின் தூதுச்செய்தியை வழங்கினார்கள். ஆனால் அவன் சண்டையிடுவதற்கு முன்னுரிமை வழங்கினான். அபூ அமீர் அவர்கள் اَللّٰهُمَّ اشْهَدْ عَلَيْهِ என்று கூறினார்கள்.பொருள்:அல்லாஹ்வே! இதற்கு நீ சாட்சியாக இரு!

இதனைக் கூறியவாறு அன்னார் வாளால் கடுமையாக தாக்கியதில் அவன் இரண்டு துண்டாகி மண்ணில் விழுந்துவிட்டான். பிறகு இரண்டாவது சகோதரன் வந்தான்; அபூ ஆமிர் அவனுக்கும் முதலில் இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். அவன் மறுத்ததனால் சண்டையிட்டார்கள். அவனும் கொல்லப்பட்டான். இவ்வாறாக ஒருவர் பின் ஒருவராக ஒன்பது சகோதரர்கள் கொல்லப்பட்டார்கள். பத்தாவது சகோதரன் வந்தபோது அபூ அமீர் முன்பை போன்றே اَللّٰهُمَّ اشْهَدْ عَلَيْهِ என்று கூறி அவன் மீது தாக்குதல் தொடுக்க சென்றபோது அவன் اَللّٰهُمَّ لَا تَشْهَدْ عَلَيَّ என்று கூறினான்.பொருள்: அல்லாஹ்வே! என் மீது சாட்சியாக இருக்காதே! என்று கூறினான். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருப்பதைப் போன்று அவன் வெளிப்படுத்தினான். இதனைக் கேட்டதும் அபூ ஆமிர் தனது வாளை கீழே தாழ்த்தி விட்டார்கள்; மேலும் அவனை விட்டு விட்டார்கள். ஆனால் அவன் திரும்பி அபூ ஆமீர் மீது தாக்குதல் செய்து விட்டான். அவன் ஏமாற்றி விட்டான்.

சில அறிவிப்புகளின் அடிப்படையில் அவன் அபூ அமீரை ஷஹீது ஆக்கிவிட்டான். ஆனால், மற்ற அறிவிப்புகளின் அடிப்படையில் இது சரியானது அல்ல; ஏனெனில் எவன் அபூ ஆமீரை ஷஹீதாக்கியிருந்தானோ அவனை ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அப்போதே கொன்று விட்டார்கள்.

அவர் பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்; அந்த பத்தாவது சகோதரர் என்ற இந்த அறிவிப்பே மிகவும் சரியானதாகும். மேலும் அவர் மிகச் சிறந்த முஸ்லிமாக நிரூபணமானார் என்றும் கூறப்படுகிறது. மேலும் பின்னர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பார்வை அவர் மீது படும்போது, “இவர் அபூ ஆமீரின் வாளிலிருந்து தப்பியவராவார்” என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறிவந்தார்கள்..

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூ ஆமீர் மிக வீரத்துடன் போரிட்டு வந்தார்கள். மேலும் அன்னாரது வாளுக்கு முன் வந்தவர் கொல்லப்பட்டார். இறுதியில் ஹாரிஸ் ஜுஷமியின் அலா மற்றும் அவ்ஃபா என்ற இரண்டு மகன்கள் அன்னார் மீது அம்பு மழை பொழிந்தார்கள். ஓர் அம்பு அன்னாரது நெஞ்சில் தைத்தது. ஒன்று மூட்டில் பட்டது.

சில அறிவிப்புகளின் அடிப்படையில் அம்பை எய்தவன் துரைத் பின் ஸிம்மாவின் மகன் ஸலமஃ ஆவான்.

அபூ மூஸா அஷ்அரி அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் அபூ ஆமீரிடம் உங்கள் மீது யார் அம்பெய்தது? என்று கேட்டேன். அவர்கள் ஒரு நபரை நோக்கி சைகை செய்தார்கள். மேலும் நான் அவனை விரட்டிச் சென்றேன். அதனால் அவன் தப்பியோடப் பார்த்தான். மேலும் நான் அவனை சீண்டினேன். அப்போது அவன் நின்று விட்டான். மேலும், நாங்கள் வாள் சண்டையிட்டோம்; நான் அவனை கொன்று விட்டேன். திரும்பி வந்து, அல்லாஹ் உம்மை கொன்றவனை நரகத்திற்கு அனுப்பி விட்டான் என்று நான் அபூ ஆமிரிடம் கூறினேன். அதற்கு எனது அம்பை எடுங்கள் என்று அபூ ஆமிர் கூறினார்கள்.

அம்பு அப்போது உடலில் தான் இருந்தது. அவர்கள் கூறுகிறார்கள்; நான் அம்பை எடுத்த போது காயத்திலிருந்து தண்ணீர் வழிந்தது.

இதிலிருந்து காயம் ஆழமாக உள்ளது; மேலும் உயிர்பிழைக்கும் எந்த நம்பிக்கையும் இல்லை என்று தெரியவந்தது.

அபூ மூஸா அஷ்அரி கூறுகிறார்கள்; “ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு எனது ஸலாத்தை தெரிவியுங்கள்; மேலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் எனக்காக இஸ்திஃக்ஃபார் மற்றும் பாவமன்னிப்புக்காக துஆ செய்ய விண்ணப்பம் செய்யுங்கள்; மேலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் என்னுடைய குதிரை மற்றும் என்னுடைய ஆயுதங்களையும் கொடுத்து விடுங்கள்” ! என்று அபூ ஆமிர் என்னிடம் கூறினார்கள். அத்துடன் என்னை தனது பிரதிநிதியாக ஆக்கினார்கள்; மேலும் கொடியை என் வசம் ஒப்படைத்தார்கள்; சிறிது நேரத்திலேயே இறந்து விட்டார்கள்.

அபூ மூஸா அஷ்அரி அம்மக்களுடன் போரிட்டார்கள். மேலும் எதிரிகள் தோல்வியடைந்து அங்கிருந்து ஓடி விட்டார்கள். அவர்களில் சில மக்கள் கொல்லப்பட்டார்கள். அபூ மூஸா அங்கிருந்தும் போர் செல்வங்கள் மற்றும் கைதிகளை அழைத்துக்கொண்டு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்து சேர்ந்தார்கள்.

அபூ மூஸா அஷ்அரி கூறுகிறார்கள்;

நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் ஆஜரான போது அன்னார் (ஸல்) கயிற்றால் பின்னப்பட்ட ஒரு கட்டிலில் படுத்திருந்தார்கள். அதில் எந்த விரிப்பும் இருக்கவில்லை. ஆனால் புஹாரீ மற்றும் சில பிற அறிவிப்புகளின் அடிப்படையில் அதில் விரிப்பும் இருந்தது; எனினும் மிகவும் மெல்லியதாக இருந்தது என்று வருகிறது. அந்த கயிறுகளின் அடையாளங்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய உடலில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. அவர்கள் கூறுகின்றார்கள்

நான் அவ்தாஸ் போரின் விவரங்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் விவரித்தேன். மேலும் அபூ ஆமிர் அவர்களின் ஷஹாதத் பற்றிய விளக்கத்தைக் கூறியவாறு அன்னாரது துஆவிற்கான விண்ணப்பத்தையும் முன்வைத்துவிட்டேன். அப்போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தண்ணீரை கொண்டு வரச் செய்து உளூ செய்தார்கள்; பிறகு தமது இரு கைகளையும் உயர்த்தி துஆ செய்தவாறு இவ்வாறு கூறினார்கள்;

அல்லாஹ்வே! உபைத் பின் ஆமிரை மன்னித்தருள்வாயாக !அல்லாஹ்வே! மறுமை நாளன்று உனது படைப்பினங்களில் மக்களில் அனைவரையும் விட உயர்வாக அவரது அந்தஸ்தை வைப்பாயாக!

அபூ மூஸா அஷ்அரி கூறுகிறார்கள்

நான் கூறினேன்; அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்காகவும் பாவமன்னிப்பிற்காக துஆ செய்யுங்கள். அதற்கு, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அன்னாருக்காகவும் துஆ செய்தார்கள். மேலும் கூறினார்கள்;

அல்லாஹ்வே! அப்துல்லாஹ் இப்னு கைஸ் -அதாவது அபூ மூஸா அஷ்அரி. அவருடைய பாவங்களை மன்னித்தருள்வாயாக! மேலும் அவருக்கு கியாமத் நாளன்று உயர்ந்த அந்தஸ்தை வழங்குவாயாக!

( ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 772, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அடுத்து, துஃபைல் பின் அம்ர் தவ்ஸியின் படை பற்றிய குறிப்பு. இவர் துல்கஃப்ஃபைனை நோக்கி அனுப்பப்பட்டார். இது ஹிஜ்ரி 8 ஷவ்வால் மாதத்தில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹுனைனிலிருந்து தாயிஃபை நோக்கி செல்லும் போது, அன்னார் (ஸல்) துஃபைல் தவ்ஸியை துல் கஃப்ஃபைன் என்ற பெயருடைய சிலையை வீழ்த்த அனுப்பினார்கள். ஹஸ்ரத் துஃபைல் (ரலி) அவர்கள் தவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். மேலும் தமது கோத்திரத்தின் மகத்துவமிக்க கவிஞராகவும் ஞானமிக்கவராகவும், அறிவுடையவராகவும் சிறப்பு பெற்றிருந்தார்கள். இவர்கள் மக்காவில் இருந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை சந்தித்து அப்போதே முஸ்லிமாக ஆகிவிட்டிருந்தார்கள். ஹுனைன் போருக்குப் பிறகு அவர்கள் சுயமே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் துல் கஃப்ஃபைன் என்ற பெயருடைய சிலையை அகற்ற தம்மை அனுப்ப வேண்டும் என்று கோரினார்கள் என்று கூறப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இந்த திட்டத்தில் இவர்களை அமீராக நியமித்தார்கள்.

மேலும் ஸலாத்தை நன்கு பரப்புங்கள் என்று அறிவுரையும் வழங்கினார்கள். அதாவது அமைதியை ஊக்குவியுங்கள் என்பதாகும். மக்களுக்கு உணவளிக்க வேண்டும்; அவர்களை பட்டினிப் போட்டு கொல்லக்கூடாது; மேலும் ஒரு கண்ணியமிக்க நபர் தனது குடும்பத்தினரிடம் எவ்வாறு வெட்கப்படுகின்றாரோ அதேபோன்று அல்லாஹ்விடம் வெட்கப்படுதல் வேண்டும்; எப்போது தவறு அல்லது பாவம் செய்தாலும் உடனடியாக அதற்குப் பிறகு நன்மை செய்து விடுங்கள்; ஏனென்றால் நன்மைகள் பாவங்களை அழித்து விடுகின்றன. அன்னார் (ஸல்) இவ்வாறு அறிவுரை செய்தார்கள். மேலும் பிறகு கூறினார்கள்; உமது சமுதாய மக்களை சேர்த்துக் கொள்ளுங்கள்; மேலும் இந்த பணியை முடித்துவிட்டு தாயிஃபுக்கு திரும்பி வாருங்கள்! என்று கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் துஃபைல் (ரலி) அவர்கள் தமது சமுதாயத்தின் 400 நபர்களை உடன் அழைத்துக் கொண்டு மரத்தால் உருவாக்கப்பட்ட அந்த சிலைக்கு நெருப்பு மூட்டி எரித்து விட்டார்கள். மேலும் அப்போது இவ்வாறு கவிதை பாடினார்கள்;

துல் கஃப்ஃபைனே! கேள்! நான் உன்னை வணங்குபவர்களைச் சார்ந்தவன் அல்லன். ஏனென்றால் நீயே படைக்கப்பட்டிருக்கின்றாய்; இத்தனைக்கும் எங்களுடைய பிறப்பு உன்னுடைய பிறப்பிற்கும் முன்பே ஆகிவிட்டது; பார்! உன்னுடைய உட்பகுதி மற்றும் வெளிப்பகுதி அனைத்தையும் நான் நெருப்பின் ஜுவாலைகளால் நிரப்பி விட்டேன்.

இந்தப் பணியை வெற்றிகரமாக முடித்துவிட்ட பிறகு தாயிஃபிற்கு திரும்பி வந்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தாயிஃபை அடைந்து அப்போது நான்கு தினங்கள் ஆகியிருந்தன. ஹஸ்ரத் துஃபைல் (ரலி) தம்முடன் போர்க்கலைகளை அறிந்த நானூறு வீரர்களையும் அழைத்து வந்தார்கள். மேலும் அந்தக் காலத்தை பொறுத்தவரையிலான நவீன போர் கருவிகளான மின்ஜனீக் மற்றும் தப்பாபஃ போன்ற போர் கருவிகளையும் கொண்டு வந்திருந்தார்கள். மின்ஜனீக் என்பது பெரும், பெரும் கற்களை வீசும் கருவியாகும். அதாவது பீரங்கியைப் போன்ற கருவியாகும். மேலும் தப்பாபஃ என்பது ஒரு கடினமான மரத்தால் ஆன மற்றும் மூடப்பட்ட வண்டியைப் போன்ற பெட்டியாகும். இக்காலத்தில் ஆயுதம் தாங்கிய கார்கள் இருப்பதைப் போன்று அந்தக் காலத்தில் அதனுள் பல மக்கள் நுழைந்து கோட்டைக்கு உட்புறம் சென்றடைய முடியும். மேலும் எதிரிகளின் தாக்குதலில் இருந்தும் அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். மேலும் ஃபைஸல் என்ற ஆயுதம். இந்த ஆயுதங்கள் முதன்முறையாக தாயிஃப் போரில் பயன்படுத்தப்பட்டன.

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 9, பக்கம் 337-339)

தாயிஃப் போரும் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம் நிகழ்ந்தது. தாயிஃப் மக்காவிற்கு கிழக்கே உள்ளது. இதனுடைய வரலாறு என்னவென்றால் மக்காவின் கிழக்குத் திசையில் சுமார் 90 கி.மீ தொலைவில் உள்ள ஒரு பிரசித்திப் பெற்ற நகரம் ஆகும். தாயிஃப் மிகவும் வலிமையான இடமாகும். தாயிஃப் என்று கூற காரணம் அதனை சுற்றி பாதுகாப்பிற்காக நான்கு சுவர்கள் இருந்தன.

இங்கு இருந்த ஸகீஃப் கோத்திரம் மிகவும் வீரமுள்ளதாகவும் தைரியமான சமுதாயமாகவும் இருந்தது. முழு அரேபியாவிலும் சிறந்தவர்களாகவும், குறைஷியர்களுக்கு இணையானவர்களாகவும் இருந்தார்கள். உர்வா பின் மஸ்ஊத் இதன் தலைவர் ஆவார். அபூ ஸுஃப்யானின் மகளுடன் அவனது திருமணம் நிகழ்ந்தது.

''திருக்குர்ஆன் ஒருவேளை இறங்கியிருந்தால், பின்னர் அது மக்கா அல்லது தாயிஃபின் தலைவர்கள் மீது இறங்கியிருக்கும்'' என்று மக்கத்து நிராகரிப்பாளர்கள் கூறி வந்தார்கள். இது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது இறங்குவதற்கு பதிலாக வேறொரு பெரிய மனிதர் மீது இறங்கியிருக்க வேண்டும்; பெரிய மனிதரோ இவ்விரு இடங்களிலேயே வசித்து வருகின்றார்கள் என்று கூறிவந்தார்கள். இங்குள்ள மக்கள் போர்க் கலையையும் அறிந்தவர்களாக இருந்தார்கள்.

எவ்வாறாயினும் இங்கு பாதுகாப்பான கோட்டை ஒன்று இருந்தது. நகரவாசிகள் வருடம் முழுவதற்குமான அத்தியாவசியப் பொருட்களை ஒன்று திரட்டினார்கள். நாலாபுறமும் முன்ஜனீக் எனும் போர்த் தளவாடமும், ஆங்காங்கே வில்வித்தை நிபுணர்களும் நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

இந்தப் போர் உண்மையில் ஹுனைன் போரின் தொடர்ச்சியே ஆகும். ஹவாஸின் மற்றும் ஸகீஃப் கோத்திரத்தாரின் பெரும்பாலான நபர்கள் இதற்கு முன் தோல்வியுற்ற நபர்கள் தங்களது தலைவன் மாலிக் பின் அவ்ஃப் நஸ்ரியுடன் ஓடி தாயிஃப் நகரத்திற்கு தான் வந்தார்கள். மேலும் இந்த கோட்டைக்குள் தான் தஞ்சம் புகுந்தார்கள். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹுனைன் போரை முடித்துவிட்டு அனைத்து போர் செல்வங்களையும், 6000 போர்க் கைதிகளையும், அடிமைகளையும்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716

89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

பெண்களையும் மக்காவுக்கு அருகில் ஜிஃரானஃ என்ற ஒரு பள்ளத்தாக்கிற்கு அனுப்பிவிட்டு, அன்னார் (ஸல்) சுயமே தாயிஃபை நோக்கி சென்றார்கள். ஜிஃரானாவும் தாயிஃபின் வழியில் மக்காவுக்கு அருகில் இருந்த ஒரு கிணற்றின் பெயராகும். மக்காவிலிருந்து இதன் தூரம் சுமார் 17 மைலாகும். இந்த போர்ச் செல்வங்கள் மீது அன்னார் (ஸல்) பதீல் பின் வர்கா அல்லது ஹஸ்ரத் மஸ்வூத் பின் அம்ர் கஃப்பாரி (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக நியமித்தார்கள். இவ்வாறாக அன்னார் காலித் பின் வலீத் தலைமையில் ஓராயிரம் வீரர்களைக் கொண்ட படையை முதலில் அனுப்பினார்கள். அவர்கள் அங்கு சென்றடைந்து கோட்டைவாசிகள் அதாவது தாயிஃப் வாசிகளிடம் பேச்சுவார்த்தைக்கு முயற்சி செய்தார்கள். ஆனால் கோட்டைவாசிகள் உடன்படவில்லை. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை அனுப்பி வைத்த பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தானும் தாயிஃபை நோக்கி புறப்பட்டார்கள். அந்த வழிகளில் நிபுணர்கள் உடன் இருந்தார்கள். படைக்கு முன் வழிநடத்தி சென்று கொண்டிருந்தார்கள். வழியில் ஹுனைன் களத்தில் எதிரி படைத் தளபதியான மாலிக் பின் அவ்ஃபின் இந்த கோட்டை இருந்தது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இதில் யாரும் வசிக்கிறார்களா ? என்று கேட்டார்கள். இது காலியாகும் என்று கூறப்பட்டதும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அதனை இடிக்கச் செய்தார்கள். பிறகு பயணத்தை தொடர்ந்தவாறு தாயிஃப் வந்தடைந்தார்கள். மேலும் தாயிஃப் கோட்டைக்கு அருகில் கூடாரம் இட்டு அதனை முற்றுகை இட்டார்கள்.

(ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், தொகுதி 5, பக்கம் 382, தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத், 1993)

தாயிஃப் வாசிகள் ஒரு வருடமாக இந்த போருக்காக ஆயத்தத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் கோட்டையை சீர் செய்தும் வைத்திருந்தார்கள். மேலும் ஒரு வருடத்திற்கான தானியங்களை சேர்த்து வைத்திருந்தார்கள். மேலும் ஹுனைன் போர்க் களத்தில் எதிர்பாரா தோல்வியடைந்து, எத்தனை மக்களால் ஓட முடிந்ததோ அவர்கள் அனைவரும் ஓடி இந்த கோட்டைக்குள் தஞ்சம் புகுந்து விட்டார்கள். மேலும் கோட்டையின் கதவுகளை மூடி வைத்து விட்டார்கள்.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 5. பக்கம் 382, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1993)

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் தாயிஃபிற்கு மிக அருகில் ஒரு திறந்தவெளியில் முகாமிட்டார்கள். படை அப்போது முழுவதுமாக முகாமிட்டிருக்கவில்லை அதற்குள், கோட்டையின் உள்ளே இருந்து வில்லாளிகள் கடுமையாக அம்பை எய்து பல முஸ்லிம்களை காயமடைய செய்து விட்டார்கள். அந்நேரத்தில் ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்து இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த இடம் நாம் தங்குவதற்கு உகந்தது அல்ல ;ஏனென்றால் தாயிஃப் வாசிகள் அம்பு எய்வதில் நிபுணர்கள் ஆவார்கள்; மேலும் அவர்களது அம்புகள் தொலைதூரம் வரை பாய்பவை ஆகும்.

ஆக, வேறு உகந்த ஓர் இடத்தை தேர்வு செய்யுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அன்னாரிடத்தில் கூறினார்கள். பிறகு ஒரு புதிய இடத்திற்கு முழுப் படையும் இடம்பெயர்ந்தது. முற்றுகையின் போது இரு பிரிவினர் சார்பாகவும் அம்பெய்யப்பட்டது. மேலும் கல் எறிதல் சம்பவங்களும் நிகழ்ந்து கொண்டிருந்தன. இந்த நிலைமையில் சமாளிப்பதற்காக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மின்ஜனீக் எனும் போர்க் கருவியைப் பொறுத்தி தாயிஃப் வாசிகள் மீது பெரும், பெரும் கற்களை எறிந்தார்கள். இந்த மின்ஜனீக் தொடர்பாக முன்னர் கூறப்பட்டு விட்டது. இது ஹஸ்ரத் துஃபைல் அவர்கள் தவ்ஸி துல்கஃப்ஃபைன் எனும் போரிலிருந்து திரும்பும் நேரத்தில் தம்முடன் கொண்டு வந்தார்கள். கற்களை வீசியதால் தான் ஒருநாள் கோட்டையின் ஒரு சுவற்றில் ஒரு துளை விழுந்தது. எனவே முஸ்லிம்களின் ஒரு கூட்டம் தப்பாபஃவின் மூலமாக- அது ஒரு பெட்டியாக இருந்தது. அது பாதுகாப்பானதாக இருந்தது. இதன் மூலமாக கோட்டையின் சுவற்றை நோக்கி முன்னேறினார்கள். இதன் மூலம் கோட்டைக்குள் செல்ல முடியும் என்பதால் இதனை பயன்படுத்தினார்கள். ஆனால் முன்னேறி சென்றதும் கோட்டைவாசிகள் அவர்கள் மீது எரிந்து கொண்டிருந்த இரும்பின் துண்டுகளை அவர்கள் மீது வீச ஆரம்பித்தார்கள். துப்பாபஃவில் பெருமளவு தோலை பயன்படுத்துவதால் அதில் தீ பற்றி விட்டது . மேலும் அதன் கீழிருந்து முஸ்லிம் போராளிகள் வெளியே வர நேரிட்டது. மேலும் வெளியே வந்ததும் தாயிஃப் வாசிகள் அவர்கள் மீது அம்பெய்து அவர்களில் பெரும்பாலானவரை ஷஹீதாக்கிவிட்டார்கள். அதே நேரத்தில் ஒருமுறை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தாயிஃப் வாசிகளின் திராட்சைத் தோட்டங்களை வெட்டவும் கட்டளையிட்டார்கள். எனது கருத்துப்படி இது இறுதி ஆயுதமாக இருந்தது. அவர்களை அச்சுறுத்துவதற்காக பொதுவாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஏனென்றால் பிறகு அதனை நிறுத்தியும் விட்டார்கள். முதலில் கோட்டைவாசிகள் மிகவும் ஆணவத்துடன் நீங்கள் எங்களது தோட்டங்களை எரிப்பது என்றால் எரித்துக் கொள்ளுங்கள்;எனினும், நீங்கள் எங்களது மண்ணையும், தண்ணீரையும் உடன் கொண்டு செல்ல முடியாது என்று கூறினார்கள். அவர்களுக்கு தங்களது பகுதியின் பசுமை மீது மிகவும் நம்பிக்கை இருந்தது. மேலும் அவர்களது நோக்கம் என்னவாக இருந்தது என்றால் நாங்கள் மீண்டும் விவசாயம் செய்து கொள்வோம்; நாங்கள் அஞ்சப் போவதில்லை என்பதாகும். ஆனால் உண்மையிலேயே தோட்டங்களை வெட்ட ஆரம்பித்ததும் அதாவது அவர்களுக்கு எடுத்து கூறுவதற்காக சில பகுதிகளை வெட்டினார்கள். நீங்கள் கூறுகிறீர்கள் என்றால் நாங்கள் வெட்டுகிறோம் என்று காட்டுவதற்காக. எனவே தாயிஃபின் ஒரு தலைவன் ஸுஃப்யான் பின் அப்தில்லாஹ் ரஸூல் (ஸல்) அவர்களிடம், நீங்கள் எங்களது தோட்டங்களை ஏன் வெட்டுகிறீர்கள்? ஒருவேளை நீங்கள் எங்களை வெற்றி கொண்டு விட்டீர்கள் என்றால் இவை அனைத்தும் உங்களுக்கு உரியவை ஆகும். இல்லையென்றால் இறைவனுக்காக உறவை பேணியவாறு, நீங்கள் இவ்வாறு செய்யாதீர்கள் என்று கூறினான். அவர் அல்லாஹ்வுக்காக எங்கள் மீது கருணை காட்டுங்கள்! என்று விண்ணப்பமும் செய்தார். இவ்வாறு செய்யாதீர்கள் என்று விண்ணப்பித்தார். குறைஷியர்களில் பெரும்பாலானவர்களது உறவு தாயிஃப் வாசிகளுடன் இருந்தது. அவ்வாறில்லை என்றாலும், எவ்வாறு இருப்பினும் ரஸூல் (ஸல்) அவர்களது நடைமுறை எதுவாக இருந்தது என்றால் யார் மீதும் கடுமை காட்டியதில்லை. எனவே ஸுஃப்யானின் விண்ணப்பத்திற்கு இணங்கி ரஸூல் (ஸல்) அவர்கள் அந்த தோட்டங்களை விட்டு விட்டார்கள் வெட்டவில்லை. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) மற்றும் ஸஹாபிகள் அரை மாதம் அல்லது அதைவிட அதிகமான நாட்கள் வரை தாயிஃப் வாசிகளுடன் போரில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் தாயிஃப் வாசிகள் மீது உண்மையில் ஹுனைன் போரின் தோல்வியால் எந்த அளவுக்கு அச்சம் மற்றும் திகில் உள்ளங்களில் இருந்தனவென்றால் அவர்கள் கோட்டைக்குள் இருந்தவாறே சண்டையிட்டார்கள்; வெளியே வரவில்லை. அதற்கிடையில் அவர்களில் ஒரு நபர் கூட கோட்டையில் இருந்து வெளியே வந்து சண்டையிடவில்லை.

(தாரீகே தபரீ, தொகுதி 2, பக்கம் 171, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1987-ம் ஆண்டு)

எதுவரை என்றால் ஒரு முறை காலீத் பின் வலீது களத்தில் இறங்கி ஸகீஃபின் வீரர்களுக்கு சவால் விட்டார்கள். மேலும் சண்டைக்கு அழைத்தார்கள். மேலும் மீண்டும், மீண்டும் அழைத்தும் எவரும் வெளியே வரவில்லை. எதுவரை என்றால் ஸகீஃபின் தலைவன் அப்துல் யாலீல், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை உரத்த குரலில் அழைத்து எங்களில் எவரும் உமக்கு போட்டியாக வரமாட்டார்கள்; நாங்கள் எங்களது கோட்டைக்குள் பாதுகாப்பாக இருக்கின்றோம்; மேலும் வருடம் முழுவதற்குமான உணவுப்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

பொருட்கள் எங்களிடம் உள்ளன; எங்களுக்கு எந்த கவலையும் இல்லை என்று கூறினான். அதேபோன்று ஒரு முறை ஹஸ்ரத் யஸீத் பின் ஸம்அஃ அவர்கள், கோட்டை வாசிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தும்படி கூறினார்கள்;நீங்கள் உத்தரவாதம் கொடுத்தீர்கள் என்றால் நான் ஒரு விஷயம் பேச விரும்புகிறேன்; நீங்கள் எனக்கு இழப்பை ஏற்படுத்த மாட்டீர்கள் என்று எனக்கு உத்திரவாதம் தாருங்கள்; நான் தூதுவனாக வர விரும்புகிறேன் என்று அன்னார் கூறினார்கள்.

அவர்கள் உத்திரவாதம் வழங்கினார்கள். சரி! நாங்கள் உத்திரவாதம் வழங்குகிறோம் என்று கூறினார்கள். அன்னார் கோட்டைக்கு அருகில் சென்றார்கள். ஆனால் அவர்கள் உடன்படிக்கையை முறித்தவாறு அன்னார் மீது அம்பு எய்த ஆரம்பித்தார்கள். மேலும் அன்னார் ஷஹீதானார்கள். இவர்கள் அந்தப் போரின் முதல் ஷஹீதாவார்கள். இவர்கள் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்களின் சகோதரியின் மகன் ஆவார்கள். அன்னாரை ஷஹீதாக்கியவன் ஹுஸைல் பின் அபீ ஸலத் என்பவன் ஆவான். அவன் அவர்களை ஷஹீதாக்கிய பிறகு இறுமாப்புடன் கோட்டையை விட்டு வெளியே வந்தான். மேலும் இந்த சம்பவத்தினால் முஸ்லிம்கள் அஞ்சி விட்டார்கள்; ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று கருதினான். ஆனால் அவன் கோட்டையின் கதவை விட்டும் வெளியே வந்தவுடன் ஹஸ்ரத் யஸீத் பின் ஸம்அஃவின் சகோதரர் யஃகூப் பின் ஸம்ஆ, அவர் கோட்டையின் கதவுகளுக்கு அருகில்தான் மறைந்திருந்தார். அவர் அவனை பிடித்து ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முன் கொண்டு வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவன் எனது சகோதரனை கொன்றவன் ஆவான் என்று கூறினார். எனவே அவன் கொல்லப்பட்டான். இந்த விவரங்கள் மேற்கொண்டு எதிர்வரும் காலத்திலும் கூறப்படும். இன்ஷா அல்லாஹ்!

தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன். முதலாவது மதிப்பிற்குரிய டாக்டர் ஸய்யிது ஷஹாப் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாகும். அவர்கள் இன்றைய நாட்களில் கனடாவில் வசித்து வந்தார்கள். அடிப்படையில் இவர்கள் இந்தியாவைச் சார்ந்தவர் ஆவார்கள். கடந்த நாட்களில் 96 வயதில் வஃபாத்தானார்கள். انا للہ وانا الیہ راجعون அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள்.

இவர்களுக்கு ஒரு மகனும், மூன்று மகள்களும் இருக்கின்றார்கள். இவர்களது சந்ததிகள் இன்றும் இருக்கின்றனர். இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியாகிய பீஹார் மாநிலத்தைச் சார்ந்த ஹஸ்ரத் ஸய்யிது இராதத் ஹுசைன் ஸாஹிப் (ரலி) அவர்களது மகன் வழிபேரர் ஆவார்கள். அன்னார் அலிகர் முஸ்லிம் யூனிவர்சிட்டியில் உளவியல் துறையில் எம். எஸ். ஸி படித்தார்கள். பிறகு பீஹாரி யுனிவர்சிட்டி முஸஃப்பர்பூரில் எம். ஏ படித்தார்கள். இதற்குப் பிறகு கிளாஸ்கோ யுனிவர்ஸிட்டி ஸ்காட்லாண்டில் இதே பிரிவில் டாக்ட்ரேட் பட்டம் பெற்றார்கள். 1968 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களது வழிகாட்டுதலுக்கு இணங்க கனடா சென்றுவிட்டார்கள். அங்கு யுனிவர்ஸிட்டியில் பேராசிரியராக கிளினிக்கல் சைக்காலஜி நடத்தி வந்தார்கள். ஒன்பது வருடங்கள் வரை இவர்கள் கிளினிக்கல் சைக்காலஜிஸ்டாக பிராக்டிஸ் செய்தார்கள். அன்னாருக்கு பல்வேறு சமயங்களில் இந்தியா மற்றும் கனடாவில் ஜமாஅத்திற்கு தொண்டாற்ற வாய்ப்பு கிடைத்தது. அன்னார் நீண்ட காலம் வரை சிஸ்கா டவுன் ஜமாஅத்தின் தலைவராகவும் இருந்தார்கள். அதற்கு முன்பு தப்லீஃக் செயலராகவும் சுறுசுறுப்பாக தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்தது. பிறகு அட்மின்டனில் இஷாஅத் செயலராக மட்டுமின்றி தர்பிய்யத் மற்றும் தஃலீம் துறைகளிலும் சேவை செய்து வந்தார்கள். வெற்றிகரமான இறைவன் பால் அழைப்பவராக இருந்தார்கள். பல பைஅத்துகள் நடைபெறுவதற்கு இவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் கனடாவின் வரலாறு ஆங்கில மொழியில் எழுதப்பட்டு வருகிறது. அதனை ஓரளவுக்கு ரிவ்யூவ் செய்யவும் அன்னாருக்கு வாய்ப்பு கிடைத்தது. சிஸ்கா டவுன் கனடாவில் பல சர்வ சமய சம்மேளனம் நடத்துவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதில் அங்குள்ள கற்ற மக்களிடையே ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்றடைந்தது. அன்னாருக்கு பல்வேறு துறைகளில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் பற்றி சொற்பொழிவாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. பல்வேறு நூலகங்களில் ஜமாஅத் நூல்களையும் வைக்கச் செய்துள்ளார்கள். ஓர் அறிவு படைத்த மனிதராக இருந்தார்கள். மேலும் அன்னாரது பல்வேறு கட்டுரைகள் ஜமாஅத் செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகள் மட்டுமின்றி இதர பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. இவர்களது ஒரு முக்கிய சாதனையாவது இவர்கள் இந்தியாவின் பீஹார் மாநிலத்தின் அஹ்மதியத்தின் வரலாற்றை ஒன்று திரட்டியுள்ளார்கள். இவர்களது இரண்டு நூல்கள் இருக்கின்றன. பீஹார் மாநிலத்தின் அஸ்ஹாபே அஹ்மத் மற்றும் பீஹார் மாநிலத்தின் ஷுஹதாயே அஹ்மதிய்யத் மற்றும் சந்த்இப்திதாயீ முஹ்லிஸீன் என்ற இந்த இரு நூல்களும் வெளியாகிவிட்டன. நல்ல நூல்களாகும். பீஹார் மாநிலத்தின் அஹ்மதிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்தார்கள். மேலும் அவர்களது வாழ்க்கையை ஒன்று திரட்டினார்கள். அவர்களது ஒரு மூன்றாவது நூலும் உள்ளது. பீஹார் மாநிலத்தில் அஹ்மதிய்யத் எனும் நூலும் முழுமை அடைந்து விட்டது. இது ஆங்கிலத்தில் உள்ளது.ஒரு நல்ல இறையச்சம் உள்ள சான்றோர் ஆவார். முன்னுதாரணமான அஹ்மதியாவார். எப்போதும் இஸ்லாமிய கட்டளைகளை பேணுவதை தனது முதல் கடமையாக கருதி வந்தார்கள். மேலும் ரஸூல் (ஸல்) மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பும் கொள்கை பிடிப்பும் இருந்து வந்தது.

அவர்களது மகன் ஸய்யிது முபாரக் கூறுகிறார்கள்: வாழ்நாள் முழுவதிலும் ஒரே நோக்கத்தை உருவாக்கி இருந்தார்கள். மேலும் அது அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதாகும். எனவே ஐவேளைத் தொழுகைகளையும் மிகவும் பேணி வந்தார்கள். இறைவணக்கத்தின்பால் அதிக ஈர்ப்பு இருந்தது. படிக்க, எழுத மற்றும் கற்றுக்கொள்ள அவர்களுக்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. வாழ்க்கையின் இறுதி நாட்களிலும் கூட அவர்கள் புது நூல்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். மேலும் முதுமையின் நிலையிலும் ஜுமுஆ தொழுகைக்காக முறையாக சென்று வந்தார்கள். மேலும் மரணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கூட வெஸ்டர்ன் கனடாவில் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். தப்லீஃக் செய்ய மிகவும் ஆர்வம் இருந்தது. மேலும் பல்வேறு பிரிவினர்களிடம் சென்று தப்லீஃக் செய்து வந்தார்கள். எல்லா விவகாரங்களிலும் காலத்தின் கலீஃபாவிடம் வழிகாட்டல் பெற்று வந்தார்கள். இவர்களது நிறைய கடிதங்கள் எனக்கும் வந்திருந்தன. தான் எழுதிய நூல்களையும் அனுப்பி வந்தார்கள். சந்தா கொடுப்பதில் எப்போதும் அனைவரையும் விட முன்னிலையில் இருப்பார்கள். வாழ்வின் இறுதி நான்கு வருடங்களில் தனது வருமானத்தின் ஐந்தில் ஒரு பகுதியை வஸிய்யத் செய்து விட்டார்கள். அல்லாஹ் அவர்களுடன் கருணையுடனும் பாவமன்னிப்புடனும் நடந்து கொள்வானாக!

இரண்டாவது நற்குறிப்பு இன்ஷா அல்லாஹ் லாஹுரைச் சார்ந்த முபாரக் கோக்கர் ஸாஹிப் அவர்களைப் பற்றியதாக இருக்கும். இவர்கள் கோக்கர் ஸாஹிபின் மகன் ஆவார்கள். இவர்களும் கடந்த நாட்களில் 81 வயதில் மரணமடைந்து விட்டார்கள். انا للہ وانا الیہ راجعون

இவர்களும் வஸிய்யத் செய்திருந்தார்கள். குஜ்ரான்வாலாவை சார்ந்த அஃப்ஸல் கோக்கர் ஷஹீதின் இளைய சகோதரரும் அஷ்ரப் கோக்கர் ஸாஹிப் ஷஹீதின் சிறிய தந்தையும் ஆவார்கள். இவர்களது குடும்பத்தில் இரண்டு ஷஹீதுகள் உள்ளார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் சிறப்பான தொடர்பு இருந்தது. அன்னார் தான் இவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இவர்களுக்கு சம்பந்தம் செய்து வைத்தார்கள். மிகவும் நெருங்கிய தொடர்பு இருந்தது. கிலாஃபத்திற்கு முன்னரும் கூட.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் அறிவுரைக்கேற்பவே இவர்கள் கராச்சியில் தனது வியாபாரத்தை ஆரம்பம் செய்தார்கள். மிகவும் வெற்றிகரமான வியாபாரமாக இருந்தது. ஆனால் ஜமாஅத் ரீதியாக

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்.....

## ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபிகளின் வாழ்க்கை வரலாற்றின் ஒளியில் பொருள் தியாகத்தின் முக்கியத்துவம்

**(மதிப்பிற்குரிய மவ்லானா ரஃபீக் அஹ்மத் பேக் ஸாஹிப், நாஸிர் பைத்துல் மால் காதியான்)**

சொற்பொழிவு காதியான் ஜல்ஸா ஸாலானா - 2022

**சென்ற இதழின் தொடர்ச்சி......**

ஹஸ்ரத் யாகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

எனக்கு அந்தக் காட்சி மறப்பதில்லை! என்னால் மறக்கவும் முடியாது! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்தபோது சில மாதங்கள் தான் கழிந்திருக்கும்! ஒரு நாள் வெளியிலிருந்து என்னை யாரோ ஒருவர் குரல் கொடுத்து அழைத்தார். பணிப்பெண்ணோ அல்லது யாரோ ஒரு சிறுவரோ இருப்பார். கதவருகே ஒருவர் நிற்கின்றார்; அவர் தங்களை அழைக்கின்றார் என்று கூறினார்கள். நான் வெளியே வந்தேன். அப்போது மர்ஹூம் ஹஸ்ரத் முன்ஷீ முஹம்மத் அரூடே கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் உத்வேகத்தோடு முன்னால் வந்து, என்னுடன் கைகுலுக்கினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தமது சட்டைப் பையிலிருந்து 2 -3 பவுண்ட் எடுத்துக் கொடுத்து இதை அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் கொடுத்து விடுங்கள்! என்று கூறினார்கள்.

இதைக் கூறியவாறு அவர்களுக்கு எந்த அளவு உருக்கம் ஏற்பட்டது என்றால், அவர்கள் உரக்க அழ ஆரம்பித்து விட்டார்கள். அவர்களின் அழும் ஆற்றல் எந்த அளவு இருந்தது என்றால், ஓர் ஆட்டை அறுப்பது போன்று தெரிந்தது.

அவர்கள் ஏன் அழுகிறார்கள்? என்று நான் ஓரளவு வியப்படைந்திருந்தேன்! எனினும், நான் மௌனமாக நின்று கொண்டிருந்தேன்; நான் அவர்கள் அமைதியாகட்டும்! பிறகு அவர்கள் அழுவதற்கான காரணத்தைக் கேட்கலாம் என்று காத்துக்கொண்டிருந்தேன்; அவர்களுக்குச் சற்று நிதானம் ஏற்பட்டதும் நான் அவர்களிடம், தாங்கள் ஏன் அழுதீர்கள்? என்று கேட்டேன். அவர்கள் கூறினார்கள்:

நான் ஓர் ஏழை மனிதனாக இருந்தேன். ஆனால், எப்போது எனக்குக் கடிதம் கிடைத்தாலும் நான் காதியான் வருவதற்காகப் புறப்பட்டு விடுவேன். இயக்கத்திற்குத் தொண்டாற்றுவதற்காக, சில பைசாக்கள் மீதமாகட்டுமே! என்று பயணத்தின் பெரும் பங்கை நான் நடந்தே கடந்து வந்தேன். ஆனால், அவ்வாறு இருந்தும் கூட 1 ரூபாயோ ஒன்றரை ரூபாயோ செலவாகிவிடும்; இங்கு வந்து நான் செல்வந்தர்கள் இயக்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக அதிகம் ரூபாய்களை செலவு செய்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது பின்னர் என்னிடமும் ரூபாய் இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வெள்ளியால் ஆன அன்பளிப்பைக் கொண்டு வருவதற்குப் பதிலாகத் தங்கத்தால் ஆன அன்பளிப்பை முன்வைக்கலாமே! என்ற எண்ணம் எனது உள்ளத்தில் தோன்றும். கடைசியில், எனது சம்பளம் சற்று அதிகரித்து விட்டது. (அப்போது அவர்களின் சம்பளம் 20 - 25 ரூபாயை எட்டியிருந்தது என்று நினைக்கிறேன்.)

அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஒவ்வொரு மாதமும் சிறிது தொகையை ஒன்றுதிரட்ட ஆரம்பித்து விட்டேன். நான் என்னுடைய உள்ளத்தில்,'இந்தத் தொகை நான் விரும்பும் அளவை அடைந்ததும், நான் இதைப் பவுண்ட் வடிவில் மாற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன் சமர்ப்பித்து விடுவேன்" என்று நிய்யத் வைத்திருந்தேன்.

என்னிடம் சில பவுண்டுகள் சேர்ந்த பிறகு.....அவர்கள் இதுவரை கூறியதும் அவர்களுக்கு உருக்கம் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். கடைசியில் அழுதவாறு அவர்கள் இந்த வாக்கியத்தை இவ்வாறு முழுமைபடுத்தினார்கள்:

என்னிடம் சில பவுண்டுகள் சேர்ந்ததும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள்.

இது களங்கமற்றத்தன்மைக்கான எத்தகைய மகத்துவமிக்க முன்மாதிரியாக இருக்கிறது! ஒரு நபர் சந்தாக்களும் கொடுக்கிறார்; தியாகங்களும் செய்கிறார்; மாதத்திற்கு ஒரு முறை அல்ல; இருமுறை அல்ல; மாறாக, மூன்று மூன்று முறை ஜுமுஆ தொழுவதற்காக காதியான் வந்து விடுகிறார். இயக்கத்தின் இதழ்களையும் நூல்களையும் வாங்குகிறார். ஒரு சாதாரணமான சம்பளம் தான் இருந்தது. இன்றோ அதைவிட அதிகமாக சம்பளம் வாங்குபவர்கள், அந்தத் தியாகத்தின் பத்தில் ஒரு பங்கைக் கூட,ஏன்? இருபதில் ஒரு பங்கைக் கூட தியாகம் செய்வதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன் செல்வந்தர்கள் தங்கத்தை சமர்ப்பிக்கும் போது நான் அவர்களை விட ஏன் பின்தங்கியிருக்க வேண்டும்? என்ற சிந்தனை அவருடைய உள்ளத்தில் எழுகிறது. ஆக, அவர் மிகவும் குறைவான ஒரு சம்பளத்திலிருந்து மாதமாதம் சில தொகைகளை ஒன்று திரட்டுகின்றார். ஒரு நீண்ட காலம் வரை ஒன்று திரட்டி வருகிறார். அந்த இடைப்பட்ட காலத்தில் அவர் தமது வீட்டில் என்னென்ன நெருக்கடிகளை சகித்துக் கொண்டாரோ! என்னென்ன கஷ்டங்கள் அவருக்கு ஏற்பட்டனவோ? தெரியவில்லை! அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன் பொற்காசுகளை சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே அவற்றை மகிழ்ச்சியுடன் சமாளித்திருப்பார். ஆனால், அவருடைய ஆசை நிறைவேறும் நேரம் வரும் போது, அவர் பார்க்க விரும்பிய அந்த வடிவத்தில் மகிழ்ச்சியைப் பெறுவதை விட்டும் அல்லாஹ்வின் நுட்பமான செயல் அவரை இழப்பிற்குரியவராக ஆக்கிவிடுகிறது. (நூல்: அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 4 பக்கம் 74 -76)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இவ்வாறே நமது அன்பிற்குரிய நண்பர் அம்ரூஹாவைச் சேர்ந்த மௌலவி முஹம்மத் அஹ்ஸன் சாஹிப் (ரலி) அவர்கள் இந்த இயக்கத்திற்கு உதவி செய்வதற்காக உன்னதமான நூல்களை எழுதுவதில் மூழ்கியிருக்கிறார்கள். ஸாஹிப்ஸாதா பீர் ஸிராஜுல் ஹக் ஸாஹிப் (ரலி) அவர்களோ ஆயிரக்கணக்கான சீடர்களுடன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு இந்த இடத்தின் ஏழ்மை வாழ்வை ஏற்றுக் கொண்டார்கள்.

...மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் ஸனோரீ (ரலி) அவர்கள்,மௌலவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஜெஹ்லமீ (ரலி) அவர்கள், மௌலவி முபாரக் அலீ ஸாஹிப் ஸியால்கோட்டீ(ரலி) அவர்கள்,காஸீ ஸியாவுத்தீன் சாஹிப் (ரலி), காஸீ கோட்டீ (ரலி) அவர்கள்,குர்தாஸ்பூர் மாவட்டத்தின் பட்டாலாவைச் சேர்ந்த முன்ஷீ சவ்தீர் நபீ பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்கள் மற்றும் முன்ஷீ ஜலாலுத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் முதலிய அன்பர்கள் தத்தமது சக்திக்கு ஏற்ப தொண்டாற்றுவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

நான் எனது ஜமாஅத்தின் அன்பு மற்றும் களங்கமற்றத்தன்மையைக் கண்டு வியப்படைகிறேன்! அவர்களில் மிகவும் குறைவான வருமானத்தை உடைய மியான் ஜமாலுத்தீன், கைருத்தீன் மற்றும் இமாமுத்தீன் கஷ்மீரி போன்றோர் எனது கிராமத்துக்கு அருகில் வசிக்கக் கூடியவர்கள் ஆவார்கள். அந்த மூன்று ஏழை சகோதரர்களும் கூட - அவர்கள் மூன்று அல்லது நான்கு அனாக்களைத் தினக்கூலி

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

வேலை செய்து சம்பாதிக்கின்றனர் - அவர்கள் மாதாந்திர சந்தா செலுத்துவதில் மும்முரமாகப் பங்கெடுக்கின்றனர். அவர்களது நண்பரான கிராமப் பதிவாளர் மியான் அப்துல் அஸீஸ் (ரலி) அவர்களின் களங்கமற்றத்தன்மையைக் கண்டும் எனக்கு வியப்பு ஏற்படுகிறது. அவர்களின் வாழ்வாதாரம் குறைவாக இருந்தபோதிலும் கூட "ஒரு நாள் இறைவழியில் செலவாக வேண்டும் என்று விரும்புகிறேன் எனக் கூறி 100 ரூபாய் கொடுத்துச் சென்றார்கள்.

இந்த ஏழை மனிதர் அந்த 100 ரூபாயைப் பல வருடங்களாக ஒன்று சேர்த்திருக்கலாம். ஆனால் இறைவன் மீது கொண்டிருந்த உணர்வானது இறை திருப்தியின் உணர்வைத் தூண்டி விட்டது.(ஸமீமா அன்ஜாமே ஆத்தம் - ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 313, 314 அடிக்குறிப்பு)

மார்க்கத்தின் வழியில் பொருள் தியாகம் செய்வதற்கான ஒரு மகத்துவ மிக்க மற்றும் கம்பீரமான உதாரணம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் சவ்த்ரீ முஹம்மத் ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்களுடையதாகும்.

லண்டன் மிஷன் ஹவுஸில் 1960 - களில், பிரிட்டனின் தலைமையகத்தில் இருக்கும் இரண்டு கட்டடங்களையும் (அவை மிகவும் பழமையாகி விட்டிருந்தன) இடித்து விட்டு ஒரு பெரிய வளாகத்தைக் கட்ட வேண்டும். அதில் ஒரு பெரிய ஹால், அலுவலகங்கள், இரண்டு பெரிய தங்கும் அறைகள் மற்றும் ஒரு சிறிய தங்கும் ஃபிளாட் இருக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டது. அப்போது இந்தக் கட்டுமானப் பணிக்காகத் தேவைப்பட்ட தொகையான ஒரு லட்சம் பவுண்ட் ஜமாஅத்திடம் இல்லை. நன்கு சிந்தித்தும், முயற்சியும் செய்த பிறகும் எந்த சூழலும் உருவாகாததால், ஹஸ்ரத் சவ்த்ரீ சாஹிப் (ரலி) அவர்களிடம், தங்களால் இந்தத் தொகையைத் தர முடியுமா? அது பிறகு தங்களுக்குத் தவணை முறையில் திருப்பி செலுத்தப்படும்! என்று கூறப்பட்டது. அவர்கள் இதற்கு சம்மதம் தெரிவித்தார்கள். திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப இந்த நோக்கத்திற்காக இவ்வாறு ஓர் ஒப்பந்தமும் போடப்பட்டது: ஹஸ்ரத் சவ்த்ரீ சாஹிப் (ரலி) அவர்கள் ஜமாஅத்திற்கு ஒரு லட்சம் பவுண்ட் வழங்குவார்கள்; ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தத் தொகையைத் திருப்பி செலுத்துவது ஜமாஅத்தின் பொறுப்பாகும்.

ஒரு நாள் மாலை இந்த எழுத்துப்பூர்வமான ஒப்பந்தம் சவ்த்ரீ சாஹிப் (ரலி) அவர்களிடம் கொடுக்கப்பட்டது. நான் நன்றாகப் படித்துப் பார்த்துவிட்டு கையொப்பமிட்டு நாளை கொடுத்துவிடுவேன் என்று அவர்கள் கூறினார்கள். அடுத்த நாள் காலையில் சவ்த்ரீ சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நான் இது தொடர்பாக யோசித்தேன்; நேர்மையுடன் இதில் ஆழ்ந்து கவனம் செலுத்தினேன்; அப்போது எனது உள்ளம் என்னிடம், ஸஃபருல்லாஹ் கான்! இன்று நீ அஹ்மதிய்யத்தின் காரணமாகத்தான் இந்த நிலையில் இருக்கின்றாய்! நீ பெற்றதெல்லாம் இந்த ஜமாஅத்தின் அருளினாலேயே ஆகும். எனவே, இப்போது நீ அதே பேருதவி புரிந்த ஜமாஅத்திற்கு, திருப்பித் தர வேண்டும் என்று கடனாக ஒரு தொகையைக் கொடுக்க விரும்புகின்றாயா? என்று கேட்டது. எனது உள்ளம் என்னை மிகவும் குற்றஞ்சாட்டியது. எனது எண்ணத்தினால் எனக்கு மிகவும் வெட்கம் ஏற்பட்டது. அதிகமாக இஸ்திஃக்ஃபார் செய்தேன். அந்த நொடியே என்னிடம் கேட்கப்பட்ட தொகையைக் கடனாக அல்ல; மாறாக, ஒரு பணிவுள்ள நன்கொடையாக ஜமாஅத்திற்கு முன் அர்ப்பணிக்க வேண்டும் என்று முடிவெடுத்து விட்டேன்.

இதைக் கூறியவாறு அவர்கள் ஒப்பந்தத்தைக் கிழித்து விட்டார்கள். ஒரு லட்சம் பவுண்ட் தொகைக்கான காசோலையை அப்போது ஜமாஅத்திடம் கொடுத்து விட்டார்கள். அத்துடன், நான் செலுத்திய இந்தத் தொகையைப் பற்றி என்னுடைய வாழ்நாளில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களைத் தவிர வேறு யாரிடமும் ஒருபோதும் கூற வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்கள். தியாகம், பணிவு மற்றும் கலப்பற்ற தன்மைக்கான என்னே ஒரு மகத்துவமிக்க முன்மாதிரி!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபாக்களிடம் பொருள் தியாகங்களுக்கான உணர்வு எந்த அளவு உறுதிபெற்று விட்டிருந்தது என்றால், அதற்கான புதுப்புது கோணங்களை மேற்கொண்டு வந்தார்கள். ஒரு சிறிய உதாரணத்தை முன்வைக்கிறேன். அதில் எல்லையற்ற தியாக உணர்வு பொலிவுறத் தெரிகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு ஸஹாபியான சாயீ (ன்) தீவான் ஷா சாஹிப் (ரலி) அவர்கள் தாம் மீண்டும் மீண்டும் காதியான் வருவதற்கான காரணத்தை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:

நான் ஏழையாக இருப்பதால் என்னால் சந்தா செலுத்த முடியாது. எனது தலையிலிருந்து சந்தாவின் சுமை இறங்கி விட வேண்டும் என்பதற்காக விருந்தினர் இல்லத்தின் கயிற்றுக் கட்டில்களைத் தயாரித்துக் கொடுப்பதற்காகக் காதியான் செல்கிறேன். (அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 13பக்கம் 9)

ஹஸ்ரத் பாபூ ஃபக்கீர் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் அமிர்தஸரஸில் இருந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் சார்பாக சந்தா வசூலிப்பவர்கள் வந்து விட்டார்கள். அவர்களிடம் ரொக்கப் பணம் இருக்கவில்லை. மாவு சேமித்து வைக்கும் பாத்திரத்தில் அரை கிலோவுக்குச் சற்று குறைவான அளவு மாவு இருந்தது. அவர்கள் அதையே கொடுத்து விட்டார்கள். முழு இரவையும் அவர்களும் அவர்களின் மனைவி மக்களும் பட்டினியாகக் கழித்தார்கள்.




பொருள் தியாகத்தின் களத்தில் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் எழுதிய அத்தியாயங்களுக்கான முன்மாதிரி மார்க்கங்களின் வரலாற்றில் கிடைப்பதில்லை. ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றிய வண்ணம் கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் உயிரையும், பொருளையும் தியாகம் செய்தார்கள். அவற்றை அல்லாஹ் ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், திருக்குர்ஆனில் "ரலியல்லாஹு அன்ஹும் வ ரலூ அன்ஹு" எனும் தனிச்சிறப்பு மிக்க பட்டத்தையும் வழங்கியுள்ளான். அதாவது, அல்லாஹ் அவர்களைப் பற்றித் திருப்தி கொண்டான். அவர்கள் அல்லாஹ்வைப் பற்றித் திருப்தி கொண்டார்கள்.

என்னே மேன்மை அந்தத் தூய மக்களுக்கு! அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அதாவது, என்னுடைய ஸஹாபிகள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள் ஆவார்; நீங்கள் அவர்களில் யாரைப் பின்பற்றினாலும் நேர்வழி பெறுவீர்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களைப் பார்த்து கூறுகிறான்:

"நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு சுவர்க்கம் அளிப்பதற்கு ஈடாக அல்லாஹ் அவர்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும் அவர்களின் செல்வங்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டான். (அதிகாரம் தவ்பா 9:111)

உண்மையான வாக்குறுதிகளை அளிக்கும் இறைவனின் புறமிருந்து, எந்தவொரு மனிதருக்கு அவரது வாழ்நாளிலேயே சுவர்க்கத்திற்கான நற்செய்தி கிடைத்து விட்டதோ அவர் நிச்சயமாக தனது குறிக்கோளை அடைந்து விட்டார். இதே வசனத்தின் கடைசி பகுதியில் அல்லாஹ் பொருள் தியாகம் செய்யக்கூடிய போராளிகளுக்கு எந்த அளவு உறுதியான சொற்களில் நற்செய்தி வழங்கியுள்ளான்! அதாவது, தமது வியர்வை மற்றும் ரத்தத்தால் சம்பாதித்த நேர்மையான வாழ்வாதாரத்தை நான் திருப்தி அடைவதற்காக அர்ப்பணிக்கும் மக்களே! நான் உங்களுக்குக் கூறுகிறேன்:

அதாவது, நீங்கள் அவனுடன் செய்த உங்கள் வணிகம் குறித்து மகிழ்ச்சி அடையுங்கள். மேலும் இதுவே மாபெரும் வெற்றியாகும்.
(அதிகாரம் தவ்பா 9:111)



அளவற்ற அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய நமது இறைவன் நம் மீது எந்த அளவு பேரருள் புரிந்திருக்கிறான்!

அவன் நம்மைப் படைத்தான். அவன் நமக்கு வாழ்வளித்தான். அவனே பொருள் சம்பாதிப்பதற்கான ஆற்றலையும் நல்வாய்ப்பையும் வழங்கினான். அவனது அருள் மற்றும் பேராதரவினால் சம்பாதிக்கப்பட்ட செல்வத்தின் ஒரு பகுதி அவனுக்காகவே அர்ப்பணிக்கப்படுகிறது. அப்போது ஒவ்வோர் அணுவையும் வழங்கும் அந்த இறைவன் எந்த அளவு மகிழ்ச்சி அடைகிறான் என்றால், சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்குகின்றான். ஐயத்திற்கிடமின்றி, நம்பிக்கை கொண்ட அடியார் ஒருவருக்கு மாபெரும் வெற்றி என்று கூறும் அளவிற்கு இதை விட அதிகம் வேறெந்த அருட்கொடை இருக்கிறது?

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் என்ன அருமையாகக் கூறுகிறார்கள்:

கவிதை வரி

இந்தப் பொன் பொருள்கள் அனைத்தும் உலகத்திலேயே இருந்து விடும். எழுப்பப்படும் நாளில் பலனளிக்கக்கூடிய அந்தப் பொன்னை உருவாக்குங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நீங்கள் இரண்டு விஷயங்களை நேசிக்க முடியாது என்பது வெளிப்படை. செல்வத்தையும் நேசித்து இறைவனையும் நேசிப்பது உங்களுக்கு சாத்தியமில்லை. ஒன்றை மட்டுமே உங்களால் நேசிக்க முடியும். எனவே, இறைவனை நேசிக்கக்கூடிய அந்த மனிதர் நற்பேறு பெற்றவராவார்.

உங்களில் ஒருவர் இறைவனை நேசித்து அவனது வழியில் பொருள் செலவு செய்தால், அவருடைய செல்வத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் பரக்கத் வழங்கப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனெனில், செல்வம் தானாக வருவதில்லை; மாறாக, இறைவனுடைய நாட்டத்தால் வருகிறது. (மஜ்மூஆ இஷ்திஹாராத் - தொகுதி 3, பக்கம் 749)

மேலும் கூறுகிறார்கள்: தம்மை பைஅத் செய்தவர்களில் ஒருவராகக் கருதும் ஒவ்வொருவரும் தற்போது தமது செல்வத்தைக் கொண்டும் இந்த அமைப்பிற்குத் தொண்டு செய்ய வேண்டிய நேரமாகும்....பைஅத் செய்த ஒவ்வொருவரும் தமது வசதிகேற்ப உதவி செய்ய வேண்டும். இவ்வாறு இறைவனும் அவர்களுக்கு உதவி செய்வான். தாமதமின்றி மாதாமாதம் அவர்களின் உதவி வந்தடைந்து கொண்டே இருந்தால், அது சிறிய உதவியானாலும் சரி! அது நீண்ட காலமாக மறந்துபோன பிறகு, ஏதாவது ஒரு நேரத்தில் தனக்கு நினைவு வந்ததன் காரணமாகவே செய்யப்படும் அந்த உதவியைக் காட்டிலும் சிறந்தது. ஒவ்வொரு நபரின் உண்மையும் அவரது தொண்டின் மூலமாகவே கண்டறியப்படுகிறது. அன்பர்களே! இது மார்க்கத்திற்காகவும் மார்க்கத்தின் நோக்கங்களுக்காகவும் தொண்டு செய்ய வேண்டிய நேரமாகும். இந்த நேரத்தைப் பொன்னானதாகக் கருதுங்கள்.

பிறகு ஒருபோதும் இது உங்களுக்குக் கிடைக்காது.(கிஷ்தி நூஹ் (தமிழில்: நூஹ் நபியின் கப்பல்) -ரூஹானி கஸாயின் தொகுதி 19(உருது) பக்கம் 83)

மேலும் கூறுகிறார்கள்:

செல்வத்தை நேசிக்காதீர்கள். ஏனென்றால், ஒரு காலம் வரும்! நீங்கள் செல்வத்தை விடவில்லை என்றால், அது உங்களை விட்டுவிடும். (மஜ்மூஆ இஷ்திஹாராத் - தொகுதி 3, பக்கம் 318)

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலமாகும். இதில் ஒரு ஜிஹாத், பொருள் தியாகத்துக்கான ஜிஹாதும் ஆகும். ஏனெனில், இது அல்லாமல், இஸ்லாத்தைத் தற்காப்பதற்காக இலக்கியங்கள் அச்சாகவும் முடியாது; திருக்குர்ஆன் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படவும் முடியாது; இந்த மொழியாக்கங்கள் உலகின் மூலை முடுக்குகள் வரை எட்டவும் முடியாது; மிஷன் ஹவுஸ்கள் (பிரச்சார நிலையங்கள்) திறக்கப்படவும் முடியாது; முரப்பிமார்களும், முபல்லிஃக்மார்களும் தயாராகவும் முடியாது; முரப்பிமார்களும் முபல்லிஃக்மார்களும் ஜமாஅத்களில் அனுப்பி வைக்கப்படவும் முடியாது; பள்ளிவாசல்கள் கட்டப்படவும் முடியாது; பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகள் மூலமாக ஏழை மக்கள் வரை கல்வி வசதிகள் எட்ட வைக்கப்படவும் முடியாது. மேலும் மருத்துவமனைகள் மூலமாக, துயரத்திற்குள்ளான மனிதகுலத்திற்குத் தொண்டு செய்யவும் முடியாது.

எனவே, உலகின் அனைத்து மூலைகள் வரை, ஒவ்வொரு மூலையில் உள்ள மனிதர் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடையாத வரை; ஏழைகளின் தேவைகள் முழுமையான முறையில் நிறைவேற்றப்படாத அந்த நேரம் வரை, இந்தப் பொருளாதார ரீதியிலான போர் தொடர்ந்து கொண்டே இருக்கும்! தத்தமது வசதி வாய்ப்புக்கேற்ப ஒவ்வோர் அஹ்மதியும் இதில் பங்கெடுப்பது அவசியம்.

(மார்ச் 31, 2006 அன்று நிகழ்த்தப்பட்ட ஜுமுஆ பேருரை(அல் ஃபஸ்ல் பத்திரிக்கை, லண்டன் வெளியீடு - ஏப்ரல் 21, 2006, பக்கம் 6)

உங்களிடம் செல்வம் இருக்கிறது என்றால், அதிலிருந்து ஸகாத்தும் சதக்காவும் செலுத்துங்கள்!

உங்களுக்கு ஏழைகளைக் குறித்த கவலை இருக்கட்டும்! (வரக்கூடிய) நாள்கள் குறித்த கவலை இருக்க வேண்டாம்! (கவிதை வரிகள்)

தமிழாக்கம்
முரப்பி அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி (மல்ஃபூஸாத்.....)**

அதாவது அவருக்காக அவ்வாறு நிகழும்.

நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்க வேண்டும்; மேலும் அவற்றை அலட்சியப்படுத்தக் கூடாது; இல்லையென்றால், அது ஒரு பெரும் பாவமாக இருக்கும். இறைவன் எப்படிப்பட்ட காரணிகளை உருவாக்கி விட்டான் என்றால் இவ்வளவு காலமாக தொழுகையை ஜம்மு செய்யப்பட்டு வருகின்றது. ஏனெனில், ஒரு சில நாட்களுக்காக இந்த விஷயம் இருந்திருந்தால் பின்னர் ஓர் அடையாளமாக இருந்திருக்காது. நாம் நபி (ஸல்) அவர்களின் ஒவ்வொரு சொல்லிற்கும் ஒவ்வொரு எழுத்திற்கும் மகத்துவம் அளிக்கின்றோம்.(மல்ஃபூஸாத், தொகுதி 2,பக்கம் 92-93,காதியான் பதிப்பு 2018)

* * * * * * * *

**8-ம் பக்கத் தொடர்ச்சி .....(குத்பா (12.8.25)**

எந்தவொரு முக்கிய தொண்டும் இவர்கள் வசம் இருக்கவில்லை. ஆனால் ஜமாஅத் தொண்டிற்காக எப்போது அழைக்கப்பட்டாலும் இவர்கள் உடனடியாக வந்து விடுவார்கள். ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் மிகவும் ஆழமான கொள்கை பிடிப்பு உள்ளவர்களாக இருந்தார்கள். மிகவும் நன்கு பழகக் கூடியவராகவும், பரிவு கொண்டவராகவும் மக்களுடைய துன்பங்களை உணர்ந்து கொள்ளக் கூடியவராகவும் இருந்தார்கள். அவற்றை போக்க முயற்சி செய்தார்கள். பொதுத் தொண்டுகளிலும் முந்திக்கொண்டு பங்கு பெற்று வந்தார்கள். தனது தாயாரின் பெயரிலும் கல்வி உதவியை செய்து கொண்டிருந்தார்கள். பின் விட்டு சென்றவர்களில் ஒரு மனைவியும், ஒரு மகளும், இரண்டு மகன்களும் உள்ளனர். அல்லாஹ் இவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

தமிழாக்கம்
முரப்பி முஹம்மது சுல்தான் மைதீன்

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி (நபிமொழி)......**

கொண்டிருந்தனர். அதனை அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டனர். இவர்கள் இருவரும் பதவிக்கு ஆசைப்படுகின்றார்கள் என்பது எனக்கு தெரியாது என்று நான் கூறினேன். அன்னார் ( ஸல்) கூறினார்கள்: எவர்கள் அதற்கு ஆசைப்படுகின்றார்களோ அப்படிப்பட்ட நபர்களை நாம் எமது பணியில் அமர்த்துவதில்லை. (ஸஹீஹ் புஹாரி தொகுதி 4, 2008 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * * * * *

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET, ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 16 OCTOBER 2025 Issue No.42

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**1-ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்.....)**

எளிதாக எதிர்கொண்டு விட முடியும் என்று முஸ்லிம்கள் கருதியிருந்தனர். ஆனால் அல்லாஹ்வின் புறமிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி வழங்கப்பட்டிருந்தது. அதாவது உண்மையில் போரானது அந்த வணிகக் குழுவுடன் அல்ல; மாறாக நிராகரிப்பாளர்களின் ஒரு பெரும் படையுடன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி வழங்கப்பட்டிருந்தது. அந்தப் படையானது மக்காவிலிருந்து அந்த வணிகக் குழுவின் உதவிக்காக வந்து கொண்டிருக்கின்றது என்றும் அல்லாஹ் அன்னாருக்கு செய்தி வழங்கியிருந்தான். எனினும், அத்துடன் இந்த ரகசியத்தை வெளிப்படுத்துவதிலிருந்தும் அல்லாஹ் அன்னாரை தடுத்திருந்தான். ஏனென்றால் அல்லாஹ் இதனை விரும்பியிருந்தான். அதாவது ஸஹாபிகளை சோதிக்க வேண்டும்; மேலும் அவர்களின் உயர்ந்த அந்தஸ்திலான ஈமான் மற்றும் அவர்களின் தியாகங்களின் அழிக்க முடியாத சித்திரம் உலகில் எப்பொழுதும் நிலைநிறுத்தப்பட வேண்டும்; மேலும் அவர்களுடைய களங்கமற்றத் தன்மையும் மக்களுக்கு ஓர் உயிருள்ள முன்மாதிரியாக ஆக வேண்டும்; மேலும் அது எதிர்கால தலைமுறையினரின் மரணித்த நரம்புகளுக்கு உயிர்ப்பாய்ச்சிட வேண்டும் என்றும் அல்லாஹ் விரும்பியிருந்தான். மதீனாவில் இருந்து பல இடங்களை தாண்டி அன்னார் (ஸல்) கடந்து சென்றபோது அன்னார் (ஸல்) ஸஹாபிகளை ஒன்று கூட்டினார்கள். மேலும் நீங்கள் மக்கத்து நிராகரிப்பாளர்களுடைய ஒரு பெரும் படையை எதிர்கொள்ள இருக்கின்றீர்கள்; இது அல்லாஹ்வின் விருப்பமாகும் என்பதை அன்னார் (ஸல்) அவர்களுக்கு தெரியப்படுத்தினார்கள். மேலும் கூறினார்கள்: கூறுங்கள்! இப்போது உங்களது கருத்து என்ன ?. முஹாஜிர்களில் இருந்து ஒரு ஸஹாபி எழுந்தார்; கூறினார்; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இங்கு ஆலோசனைக்கான எந்த கேள்வியும் எழவில்லை ; தாங்கள் முன்னேறிச் செல்லுங்கள்; எதிரிகளை எதிர்கொள்ளுங்கள்; நாங்கள் தங்களுடன் இருக்கின்றோம்; மேலும் எங்களது உயிர்களை தியாகம் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஆனால் ஒவ்வொரு முஹாஜிர் ஸஹாபியும் அமர்ந்த பிறகும் கூட, மக்களே! எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்று அன்னார் (ஸல்) கூறி வந்தார்கள். அன்ஸார் ஸஹாபிகள் ஒரு பெரும் புரிதல் கொண்ட மற்றும் தியாகம் செய்யக்கூடிய சமுதாயத்தினராகவும் இருந்தார்கள்; அவர்கள் மௌனமாக இருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் இவ்வாறு கருதி இருந்தார்கள்: அதாவது நாம் போரிடுவதற்கு தயாராக இருக்கின்றோம்; ஆனால், மக்கத்து நிராகரிப்பாளர்களோ முஹாஜிர் ஸஹாபிகளுடைய உறவினராக இருக்கிறார்கள்; அவர்களுடைய யாராவது ஒருவரின் தந்தையாகவோ, மகனாகவோ, சகோதரராகவோ, மாமாவாகவோ அல்லது சிறிய தந்தையாகவோ அந்த குழுவினர் இருக்கின்றனர். எனவே நமது உத்வேகம் அவர்களுக்கு வேதனையை கொடுக்கக் கூடும் என்று அன்ஸார் ஸஹாபிகள் கருதியிருந்தனர். மேலும் நமது உறவினர்களை கொலை செய்வதற்கு இவர்களுக்கு பெரும் இன்பம் இருக்கின்றதே! என்று முஹாஜிர்கள் கருதிவிடுவார்கள் என்று அன்ஸார் ஸஹாபிகள் எண்ணினர்.

ஆனால் மக்களே! எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்று மீண்டும், மீண்டும் நபி (ஸல்) அவர்கள் கூறிய போது, ஓர் அன்ஸாரி சஹாபி எழுந்து நின்றார்; மேலும் அவர் கூறினார்; அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆலோசனையோ தங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது; ஆனாலும் தாங்களோ மீண்டும் மீண்டும் ஆலோசனை கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்; எனவே அநேகமாக நாங்கள் ஆலோசனை கூற வேண்டும்; மேலும் இது தொடர்பாக எங்களது கருத்து என்ன? என்பதை தாங்கள் அறிய விரும்புகின்றீர்கள் என்பதே அதன் பொருளாகும் என்று நான் கருதுகின்றேன்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆம்! நீங்கள் கூறியது சரிதான்! அந்த அன்ஸாரி ஸஹாபி (ரலி) கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் புனித மக்காவிற்கு சென்றிருந்தபோது, தங்களிடம் பைஅத் செய்வதற்கு எங்களுக்கு நற்பேறு கிடைத்திருந்தது; அந்நேரத்தில், தாங்கள் மதீனாவிற்கு வருகை தர வேண்டும் என்று நாங்கள் தங்களிடம் கோரிக்கை வைத்திருந்தோம். மேலும் தாங்கள் எங்களது விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டீர்கள். மேலும் நாங்கள் இவ்வாறு உடன்படிக்கை செய்திருந்தோம். அதாவது மதீனாவில் ஏதாவது ஓர் எதிரி தங்களை தாக்கினால் நாங்களோ எங்களது உயிர் மற்றும் செல்வங்களை தியாகம் செய்து தங்களை பாதுகாப்போம்; ஆனால் மதீனாவிற்கு வெளியில் போர் நிகழ்ந்தால் பின்னர் நாங்கள் எந்த விதத்திலும் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்று நாங்கள் இந்த உடன்படிக்கையை செய்து இருந்தோம். தற்போது மதீனாவிற்கு வெளியில் போர் நடக்கின்றது என்பதால் அநேகமாக தாங்கள் அந்த ஒப்பந்தத்தின் பக்கம் சுட்டி காட்டுகின்றீர்கள்; மேலும் அந்த உடன்படிக்கை பற்றி எங்களது கருத்து என்ன? என்பதை தாங்கள் எங்களிடமிருந்து அறிய விரும்புகின்றீர்கள் என்று நான் கருதுகின்றேன்.

இறை தூதர் (ஸல்) கூறினார்கள்: நீங்கள் சரியாக புரிந்து இருக்கின்றீர்கள்; நான் அந்த உடன்படிக்கையின் பக்கமே சுட்டிக் காட்டி இருந்தேன். அப்போது அன்னார் (ரலி) கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அந்த உடன்படிக்கையை விட்டு விடுங்கள்! நாங்கள் அந்த உடன்படிக்கையை செய்திருந்தபோது, அந்த நேரத்தில் தங்களது முழுமையான கண்ணியமும், மேன்மையும் எங்களிடம் வெளிப்பட்டிருக்கவில்லை; ஆனால் தற்போது நாங்கள் கண்டுவிட்டோம்; தங்களது கண்ணியமும் மேன்மையும் என்ன? என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். மேலும் தாங்கள் எவ்வளவு மகத்தான மற்றும் கம்பீரமிக்க நபி ஆவீர்கள் என்பதையும் நாங்கள் அறிந்து கொண்டோம் ; தற்போது எந்த உடன்படிக்கை குறித்தும் கேள்வி இல்லை. அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சில மைல்கள் தொலைவிலேயே கடல் உள்ளது; தாங்கள் கட்டளையிட்டால் நாங்கள் எங்களது குதிரைகளை அதில் வீசி விடுவதற்கு தயாராக இருக்கின்றோம்; அல்லாஹ்வின் தூதர் அவர்களே! போர் நிகழ்ந்தால் இறைவன் மீது ஆணையாக! நாங்கள் உங்களது வலப்புறமும் போரிடுவோம்; உங்களது இடப்புறமும் போரிடுவோம்; உங்களுக்கு முன் நின்றும் போரிடுவோம்; உங்களுக்கு பின் நின்றும் போரிடுவோம்; எங்களின் சடலங்களை தாண்டாத வரை எதிரியால் உங்களை நெருங்க முடியாது.

ஆக அன்ஸார் ஸஹாபிகள் வெளிப்படுத்திய அந்த களங்கமற்றத் தன்மை இதுவாக இருந்தது. இந்த அர்ப்பணிப்பு மிக்க உணர்வைத்தான் அவர்கள் வெளிப்படுத்தி இருந்தார்கள். பின்னர் அவர்கள் செம்மறி ஆடுகளைப் போன்று தங்களது தலைகளை இஸ்லாத்தின் வழியில் வெட்டி கொண்டார்கள். இந்த சித்திரம் வரலாற்றின் பக்கங்களில் அல்ல ; மாறாக உள்ளங்களின் ஆழங்களில் எப்படி பதிக்கப்பட்டிருக்கின்றன என்றால் கியாமத் வரை வரக்கூடிய தலைமுறையினர் அந்த அழகிய தியாகங்களை ஒருபோதும் அவர்களால் மறக்க முடியாது.(தஃப்ஸீர் கபீர் தொகுதி 6, பக்கம் 165 காதியான் பதிப்பு 2010- ம் ஆண்டு)

* * * * * * * *

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

**Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad**